பக்கங்கள்: 16 விலை : 30/-

# காலைக்கதிர்

Kalaikkathir

விடியல் 05 வள்ளுவர் ஆண்டு 2051 மார்கழி 16 வியாழக்கிழமை 31.12.2020 கதிர் 56

### இனி இது ரகசியம் அல்ல!

“ஏதோ இலங்கையில் யாழ் மாநாகர சபை மேயர் தேர்தல் ஒன்றுதான் விவகாரம் என்பது போல நினைத்து அரைத்த மாவையே திருப்பித் திருப்பி அரைத்துக் கொண்டிருக்கின்றீர்கள். வேறு விடயங்களைத் தொட மாட்டிரோ...?” பக்கம்02 »

# யாழ். மாநகர சபையின் புதிய மேயரானார் மணி



## மண்கவ்வினார் ஆனோல்ட்

(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம் மாநகர சபையின் புதிய மேயராகத் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் உறுப்பினர் சட்டத்தரணி விஸ்வலிங்கம் மணிவண்ணன் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

புதிய மேயரைத் தெரிவு செய்வ தற்காக இன்று நடத்தப்பட்ட பகிரங்க வாக்கெடுப்பில் மணிவண்ணன் 21 வாக்குகளையும், முன்னாள் மேயர் இம்மானுவேல் ஆனோல்ட் 20 வாக்குகளையும் பெற்றனர். பக்கம் 15 »

# நல்லூர் பிரதேச சபையையும் இழந்தது தமிழ்க் கூட்டமைப்பு

## முன்னணியின் மயூரன் தவிசாளராகத் தெரிவு



(எஸ்.நிதர்ஷன்)

நல்லூர் பிரதேச சபையின் புதியதவிசாளராகதமிழ்த்தேசிய மக்கள் முன்னணியின் உறுப்பினர்பத்மநாதன்மயூரன்தெரிவு செய்யப்பட்டுள்ளார். பக்கம் 15 »

# மேயர் வேட்பாளர் பரிந்துரை குறித்து சம்பந்தனுக்கு அறிவிக்கப்படவில்லை

## அதனைக் கூட்டமைப்பு இழந்தமைக்கு தான் பொறுப்பு அல்லன் என்கிறார் அவர்



கொழும்பு, டிசெம்பர் 31

யாழ்ப்பாணம் மாநகர சபையின் புதிய மேயருக்கான வேட்பாளர் பரிந்துரை தொடர்பில் இறுதியாக எடுக்கப்பட்ட தீர்மானம் குறித்து எனக்கு அறிவிக்கப்படவில்லை. அதனால் இந்த விடயம் தொடர்பில் நான் அலட்டிக்கொள்ள விரும்பவில்லை. யாழ்.மாநகர சபையைத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இழந்தமைக்கு நான் பொறுப்பு அல்லன்.

– இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் தெரிவித்தார். பக்கம் 15 »

# கட்சித் தலைமையை விமர்சிக்கும் சுமந்திரனுக்கு இன்று உரிய பதில்

## இப்படிக் கூறுகின்றார் மாவை



கட்சிக்குள் பேச வேண்டிய விடயங்களைத்தொடர்ந்து சுமந்திரன் பகிரங்கமாகப் பேசி வருகிறார். இரண்டாவது முறை கட்சித் தலைமைக்கு எதிராக அவர் பகிரங்க அறிக்கை விடுத்துள்ளார். இது மிகவும் பிழையானது. சுமந்திரனின் கடிதம் தொடர்பில் இன்று உரிய முறையில் பதில் வழங்குவேன்.

– இவ்வாறு இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பக்கம் 15 »

# ஈசனைக் காப்பாற்ற போராடிய ஆனோல்ட்

## யாழ். மாநகர சபையில் நேற்று ஈ.பி.டி.பி. – கூட்டமைப்பு தர்க்கம்

(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம் மாநகர சபை மேயராக சட்டத்தரணி விஸ்வலிங்கம் மணிவண்ணன் நேற்றுக் காலை தெரிவுசெய்யப்பட்ட பின்னர் அவர் தலைமையில் நடைபெற்ற சம்பிரதாய பூர்வ அமர்வில், பிரதி மேயர் து.ஈசனுக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணையைக் கொண்டு வர ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் (ஈ.பி.டி.பி.) உறுப்பினர் சட்டத்தரணி மு.றெமிடியஸ் முயற்சித்தார்.

இதன்போதுமுன்னாள்மேயர் இ.ஆனோல்ட், அந்த பக்கம் 15 »

# சொலமன் சிறிலை சுமந்திரனே விரும்பினார்! ஆனோல்ட்டையே உறுப்பினர்கள் ஏற்றார்கள்!!

## 15 பேரும் சாட்சி என்கின்றார் மாவை

யாழ்ப்பாணம் மாநகர சபையின் புதிய மேயர் வேட்பாளராக சொலமன் சிறிலை நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரனே விரும்பினார். ஆனால், யாழ். மாநகர சபையில் அங்கம் வகிக்கும் கூட்டமைப்பின் 16 உறுப்பினர்களில் எவரும் அவரை விரும்பவில்லை. மேயர் வேட்பாளர் தெரிவுக் கூட்டங்களில் அவரின் பெயரை எவரும் பரிந்துரைக்கவும் இல்லை.

– இவ்வாறு இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராஜா தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் பக்கம் 15 »

# கொரோனா மரணம் 199

## மேலும் நால்வர் சாவு

இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்றால் மேலும் நால்வர் பக்கம் 15 »

# மேலும் 636 பேருக்கு கொரோனா தொற்று

இலங்கையில்நேற்றும்636 பேர் கொரோனா பக்கம் 15 »

# யாழில் நேற்றும் 12 பேருக்கு கொரோனா வைரஸ் உறுதி

## புதுக்குடியிருப்பிலும் மேலும் ஒருவர் தொற்றுடன் அடையாளம்

(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணத்தில் நேற்றும் 12 பேருக்குக் கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

இந்தத் தகவலை யாழ். போதனா வைத்தியசாலைப் பணிப்பாளர் பக்கம் 15 »



## இனி இது...

முதலாம் பக்கத் தொடர்ச்சி...

– என்று என் நண்பன் ஒருவன் வெளிநாட்டில் இருந்து தொலைபேசியில் சீறினான். அவன் வடக்கைச் சேர்ந்தவனல்லன். புலம் பெயர்ந்து பல தசாப்தங்களைக் கடந்தவன். அதனால் தனி யாழ்ப்பாணத்துப் பூராயம் அவனுக்குப் பிடிக்கவில்லைப் போலும். ஆனாலும் அதனை விட்டு விட்டு வேறு விடயத்துக்கு இன்றும் நகர முடியவில்லை. இன்றும் அதையே கருவாக எடுத்துக் கொண்டமையால், அவர் போன்ற நண்பர்கள் என்னை மன்னிப்பார்களாக.

இந்த ஒரு விடயத்துக்காக இரண்டு, மூன்று கொலங்களையே எடுத்துக் கொள்வதா என்ற அவரது கேள்வியிலும் கூட நியாயமுண்டு.

மாநகர மேயராக – நகரத்தின் முதல் பிரஜையாக – வந்து விட்டார் மணிவண்ணன். வாழ்த்துக்கள். ஆனால் இந்தப் பதவியில் அவரின் பயணம் மலர்படுக்கையல்ல. முள்பாதை என்பது உறுதி.

நாற்பத்தி ஐந்து உறுப்பினர்களைக் கொண்ட சபையில் ஆக இருபத்தியொரு உறுப்பினர்களின் ஆதரவுடன்தான் அவர் பதவிக்கு வந்திருக்கின்றார். அவருக்கு எதிராக வாக்களித்த இருபது பேரும் – அவரது கட்சியில் இருந்து கொண்டு கட்சியின் தலைமைக்கு விசுவாசமாகவும், அவருக்கு மாறாகவும் நடக்கும் மூவரும் என சபையின் பெரும்பான்மை புதிய மேயருக்கு எதிராகத்தான் உள்ளது. அதுதான் கள யதார்த்தம்.

அவரது பதவிக் கதிரைக்கு மேலே எதிரணிகளின் கத்தி தொங்கிக் கொண்டிருக்கும் நிலையில்தான் அப்பதவிக்கு அவர் வந்திருக்கின்றார்.

குறுகிய காலத்தில் தமது உத்தேசத் திட்டங்கள் அடங்கிய வரவு – செலவுத் திட்டத்தை அவர் முன் வைக்க வேண்டும். அது தோற்கடிக்கப்படுமானால் சபை முற்கூட்டியே – ஒருவருடம் முன்னதாகவே – கலையும்.

அந்த வரவு – செலவுத் திட்டத்தில் மேயர் மணிவண்ணனைத் தோற்கடித்தால், சபை கலைந்து, தங்களின் மாநகர சபை உறுப்புரிமைப் பதவியும் ஓராண்டு முன்னதாகப் பறிபோய்விடும் என்பதால், அப்படி ஒரு விஷப் பரீட்சைக்கு உறுப்பினர்கள் பலரும் முயற்சிக்க மாட்டாகள் என்பதும் –

அப்படி வரவு – செலவுத் திட்டத்தை அங்கீகரிக்கப் பண்ணி விட்டார் என்றால் அடுத்த ஒரு வருடத்துக்கும் நெருக்கடியின்றி சபையை அவர் கொண்டு நடத்த முடியும் என்பதும் –

மணிவண்ணனுக்கு சார்பான 'பிளஸ் பொயிண்ட்கள்'.

அதேநேரம், அவரின் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியும் அவரின் பதவிக் கதிரைக்கு ஆப்பு வைக்க மிக முனைப்பாக இருக்கின்றது.

மணியுடன் சேர்ந்து அணி சேர்ந்திருக்கும் தமது கட்சியின் அதிருப்தி உறுப்பினர்கள் பத்துப் பேரினதும் பதவிகளைப் பறிப்பதற்கு 'கஜேந்திரர்கள்' அணி ஆலாய்ப் பறக்கும் என்பது நிச்சயம்.

ஆனால், சட்டத்தரணியான மணிவண்ணன் தமக்கும் தமது சகாக்களான கட்சியின் ஏனைய ஓரிரு உறுப்பினர்களுக்கும் எதிராக மேற்கொள்ளப்படும் இத்தகைய பதவி பறிப்பு முயற்சிகளுக்கு நீதிமன்றத் தடை உத்தரவு பெற்றுள்ளார் என்பது தெரிந்ததே. தாம் உட்பட தம்முடன் இப்போது அணி சேர்ந்துள்ள பத்து உறுப்பினர்கள் விடயத்திலும் கூட அவ்வாறு நீதிமன்றம் தடையுத்தரவை விதிக்கக் கூடியதாக அதனை விஸ்தரிக்கச் செய்வது அவ்வளவு ஒன்றும் கஷ்டமான காரியமாக அவருக்கு இருக்காது.

அந்த நீதிமன்றத் தடை உத்தரவைக் கவசமாக – அரணாக – வைத்துக் கொண்டே சபையின் அடுத்த ஓராண்டுப் பதவிக் காலத்தை மணிவண்ணனும் அவரது குழுவினரும் கொண்டிழுத்து விட முடியும்.

இதே சமயம், கூட்டமைப்பின் மேயர் வேட்பாளர் ஆர்னோல்ட் பதவியிழந்து, அதன் பின்னர் நடந்த தேர்வில் தோற்றுகடிக்கப்பட்டு விட்டமையால் கூட்டமைப்பின் கைகளில் இருந்து பிரதி மேயர் பதவியும் பறிக்கப்பட வேண்டும் என்று, நேற்றைய தேர்தலில் மணிவண்ணனுக்கு ஆதரவளித்து அவரை வெற்றி பெறவைத்த ஈ.பி.டி.பியினர் முறுகிக் கொண்டு நிற்கின்றனர்.

ஆனால் துணை மேயர் ஈசனை அவர் தானாக விரும்பி அப்பதவியிலிருந்து விலகினாலன்றி இந்த சபையின் பதவிக் காலம் முடியும் வரை அப்பதவியிலிருந்து அகற்றவே முடியாது என்பதுதான் சட்ட நிலைமை.

யாழ் மாநகரசபையில் கூட்டமைப்புக்குக் கிடைத்த பட்டறிவுதான் நல்லூர் பிரதேச சபையில் ஏற்பட்ட அனுபவமும்.

நேரம் வரும் போது அது குறித்தும் பேசுவோம்.....!

– மின்னல் –

# 'இனி இது இரகசிமல்ல' தகவலுக்கு மாவை சேனாதிராசா பதில் விளக்கம்

நேற்றும், நேற்று முன்தினமும் 'இனி இது இரகசியமல்ல' என்ற எனது பத்தியில் வந்த தகவல்கள் தொடர்பில் இலங்கைத் தமிழரசு கட்சியின் தலைவர் மாவை சோ.சேனாதிராசா நேற்று பிற்பகல் பதில் ஒன்றை மின் அஞ்சல் மூலம் அனுப்பி வைத்தார்.

'காலைக்கதிர் பத்திரிகையில் வெளிவந்த செய்தி பற்றிய எனது பதில்' என்ற தலைப்பில் அமைந்த அக்கடிதத்தின் முழுவிவரம் வருமாறு:–

29/12/2020 ஆம் திகதி வெளிவந்த ஏட்டில் முதற்பக்கத்தில் 'இனி இது இரகசியமல்ல' என்ற தலைப்பில் யாழ் மாநகர சபை முதல்வர் தெரிவு பற்றி தங்களால் என்னைக் குறிப்பிட்டு எழுதப்பட்ட செய்தியை நான் மறுக்கிறேன். இது முற்றிலும் புனைந்து உள்நோக்கத்துடன் எழுதப்பட்ட பொய்யான செய்தியாகும்.

அதனுடைய உள்நோக்கம் நீங்கள் குறிப்பிட்டவாறு மாவை சேனாதிராசா உறுதிபடத் தெரிவித்துவிட்டு அவ்வாறு செய்யாமல் ஏமாற்றி விட்டார் என்று மறு செய்தி வெளியிடுவதற்காகவே சோடிக்கப்பட்டது.

நான் யாழ் முதல்வர் பதவிக்கு இன்னாரைத்தான் நியமித்தாக வேண்டுமென்று திட்டவட்டமாக யாரையும் குறிப்பிட்டிருக்கவில்லை. யாழ் முதல்வர் வேட்பாளராக திரு.சிறில் பெயரையும் ஆலோசனை செய்யுங்கள் என்று திரு.சுமந்திரன் சொன்னதையும் நினைவில் கொண்டிருந்தேன். 23/12/2020 அன்று இடம்பெற்ற கூட்டத்தில் திரு.சிறிலின் நற்பண்புகளையும் குறிப்பிட்டிருந்தேன். 23/12/2020 அன்று எங்கள் தரப்பிலுள்ள மாநகர சபை உறுப்பினர் அனைவரதும் கருத்துக்களையும் கூட்டமைப்புத் தலைவர்கள் கருத்துக்களையும் அறிந்தபின்தான் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது. அக்கூட்டத்தில் நான் தனித்து எந்தத் தீர்மானமும் எடுக்கவில்லை.

அதேபோல 'காலைக்கதிர்' 28/12/2020 முதல் பக்கத்திலிருந்து இரண்டாம் பக்கம் வரையிலும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, தமிழரசுக்கட்சி பற்றியும் என்னையும் குறிப்பிட்டுத் தாங்கள் எழுதிய கருத்துக்களையும் நான் நிராகரிக்கின்றேன்.

யாரோ ஒருவர் சொன்னதாக 29/12/2020 திகதியில் எழுதமுன் பத்திரிகா தார்மீகமொன்று இருந்தால் என்னுடன் ஒருமுறை விசாரித்து இருக்கலாம். இன்று 30/12/2020 'காலைக்கதிர்' பத்திரிகையிலும் திரு.சம்பந்தன், திரு.சுமந்திரன், திருவாளர்கள் மருத்துவர்.சத்தியலிங்கம், சிறீதரன் ஆகியோர் திரு.சிறில் அவர்களை யாழ். முதல்வர் வேட்பளராக நியமிக்க வேண்டும் என்று என்னிடம் சொன்னதாகக் கூறப்பட்டுள்ளது. திரு.சுமந்திரன் 20/12/2020 கொழும்பில் கூறும்போது திரு.சிறில் அவர்களையும் ஆலோசியுங்கள் என்று கூறியிருந்தார். என்னையே கூட்டங்களை நடத்தி தீர்மானங்களை எடுக்கும்படியும் குறிப்பிட்டார். 29/12/2020 அன்று திரு.கஜேந்திரகுமார் பா.உ. கூறிய கருத்தையும் கூறி மாநகர முதல்வர் மற்றும் நல்லூர் சபை வேட்பாளர் பற்றியும் யோசியுங்கள் என்று திரு.சுமந்திரன் கூறினார். நான் திரு.சுமந்திரன் அவர்களுக்கு இருக்கின்ற நிலைமைகளை விளக்கிக் கூறியிருக்கிறேன். திரு.சம்பந்தன் யாரை வேட்பாளராகப் போட வேண்டும் என்று கூறவில்லை. தமிழரசுக்கட்சியின் பொதுச் செயலாளர் மருத்துவர் திரு. சத்தியலிங்கம் மற்றும் பா.உ சிறீதரன் 23/12/2020 யாழ் அலுவலகத்தில் நடத்திய மாநகர சபை உறுப்பினர் கூட்டத்தின்பின் திரு. ஆனல்ட் அவர்களையே மாநகர வேட்பாளராக நியமிக்கவேண்டுமென்று தீர்மானமாகக் கூறினார்கள். ஆனபடியால் 30/12/2020 'காலைக்கதிர்' என்பெயர் குறிப்பிட்டு எழுதியவைகள் வலிந்து திட்டமிட்டு உண்மைக்கு மாறாக எழுதப்பட்ட செய்தியாகும்.

23/12/2020 தமிழரசுக்கட்சித் தலைமையகத்தில் மாநகரசபை உறுப்பினர் கூட்டத்தில் தேசியக் கூட்டமைப்புத் தலைவர்களும், மாநகரசபை உறுப்பினர்கள் ஒவ்வொருவரும் கூறிய கருத்துக்களுடன் மேலதிகமாக மாநகரசபை உறுப்பினர் ஐவர் பெயர்களுடன் மொத்தமாக 21 உறுப்பினர் கருத்துக்களின்படியே திரு. ஆனல்ட் மாநகர முதல்வர் வேட்பாளராக நியமிக்கப்பட்டார். இதுதான் உண்மை. 30/12/2020 நடைபெற்ற மாநகரசபை முதல்வர் தேர்வில் திரு.ஆனல்ட் அவர்களை ஆதரித்து 20 வாக்குகள் பதியப்பட்டுள்ளன. நமது தமிழரசுக்கட்சியைச் சேர்ந்த திரு. அருட்குமரன் நடுநிலைமை வகித்தார் என்பதையும் ஏன் அவர் அவ்வாறு நடந்த கொண்டார் என்பதையும் அறிய வேண்டும். 23/12/2020 அன்று நடைபெற்ற கூட்டத்தின்படி 21 மாநகரசபை உறுப்பினர்களின் கருத்தையும் கூட்டமைப்பின் பங்காளித் தலைவர்களின் கருத்துக்களையுமே நாம் அறிவித்தோம். இதையயல்லாம் மீறி நான் தீர்மானமெடுக்கலாமா?

*"தங்கள் பத்திரிகையில் நான் பதிலெழுதினால் வெளியிடுவேன்"* என்று குறிப்பிட்டபடியாலும், அல்லாது விட்டாலும் இப்பதிலை நான் அனுப்பவேண்டிய பொறுப்பினால் இக்கடிதத்தை அனுப்புகிறேன்.

மாவை.சோ.சேனாதிராசா
(தலைவர், இ.த.அரசுக்கட்சி)



**என் பதில்**

1. எனது கருத்துக்கு வேலைப்பழு மற்றும் அரசியல் நடவடிக்கை நெருக்குவாரங்களுக்கு மத்தியிலும் நேரம் ஒதுக்கி பதில் தந்த இலங்கை தமிழரசுக் கட்சித் தலைவருக்கு என் நன்றிகள்.

2.அவரது கடிதம் தொடர்பில் நான் அதிகம் பதில் விவாதம் நடத்த விரும்பவில்லை. நடத்துவது பொருத்தமற்றது என்பதுடன் அதற்கான சந்தர்ப்பமும் இதுவல்ல. அவரது கட்சியும் கூட்டமைப்பும் மாநகர சபை மற்றும் பிரதேச சபையை இழந்திருக்கும் நெருக்கடி சமயத்தில் என் வாதங்கள் அபவாதங்களாகக் கூடப்படலாம்.

3.நான் கூறவேண்டிய பல விடயங்கள், திரு.மாவை சேனாதிராசாவுக்கு, சுமந்திரன் எம்.பி. நேற்று எழுதிய கடிதத்தில் உள்ளன என்று நினைக்கிறேன். அவரின் அந்தக் கடிகதம் முழு விவரமாக இன்னொரு பக்கத்தில் பிரசுரமாகியுள்ளது.

4.சிறிதரன் எம்.பியின் நிலைப்பாடு எதுவென்று தொடர்பிலும் சுமந்திரன் எம்.பியின் கடிதத்தில் விவரம் உள்ளது.

5.*"யாழ் மாநகர மேயர் பதவிக்கு சொலமன் சிறிலை நியமிப்பது பொருத்தமானது. மாவை பேசும் போது நான் அதனை அவருக்குச் சொல்கிறேன்"* – என்று சுமந்திரன் எம்.பிக்கு கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் தெரிவித்திருந்தார் என நான் அறிந்திருந்தேன். யாழ் மாநகர சபை மேயர் வேட்பாளர் தெரிவு என்பது கட்சியின் முக்கிய விடயம் என்பதால் அது குறித்து கட்சியின் மூத்த தலைவர் இரா. சம்பந்தரின் உறுதியான நிலைப்பாடு மாவை சேனாதிராசாவுக்கு தெரியப்படுத்தப்பட்டிருக்கும் என நான் நம்பினேன். அதனையே எழுதினேன்.

சம்பந்தன் தன்னுடைய நிலைமையைத் தெளிவுபடுத்தியிருக்கின்றார். அது தனிச் செய்தியாக முன்பக்கத்தில் பிரசுரமாகியிருக்கின்றது.

6.கூட்டமைப்பு வேட்பாளராக நின்ற ஆர்னோல்ட்டுக்குக் கூட்டமைப்பின் பதினாறு உறுப்பினர்களில் பதினைந்து பேர் வாக்களித்திருக்கின்றமையைக் காட்டி, ஆகவே அதுதான் கூட்டமைப்பின் யாழ் மாநகரசபை உறுப்பினர்களின் நிலைப்பாடு, அந்த முடிவை எடுத்தவன் நானல்லன், மாநகரசபை உறுப்பினர்கள்தாம் என்று 'வேலிக்கு ஓணான் சாட்சியம்' என்ற மாதிரி – நியாயம் கற்பிக்க முயல்கின்றனர் மாவை சேனாதிராசா.

கட்சியின் முடிவாக சொலமன் சிறிலையோ அல்லது அருள்குமரனையோ கூட முதல்வர் வேட்பாளர் என்று கட்சித் தலைவர் தாம் முடிவெடுத்து அறிவித்திருந்தாலும் சில சமயம் இப்போது மாதிரி கூட்டமைப்பினர் பதினைந்து பேருக்கு மேல் பதினாறு பேர் கூட வாக்களித்திருக்கலாம். கட்சி முடிவு என அறிவிக்கப்பட்ட தீர்மானத்துக்காக வேறு வழியின்றி – அருள்குமரனைத் தவிர – பதினைந்து பேரும் வாக்களித்தமையைக் காட்டி, அது சபை உறுப்பினர்களின் முடிவு என்று எங்களுக்கு மாவை சேனாதிராசா அரசியல் பாடம் எடுப்பது மிகவும் வேடிக்கையா னது.

7.தாங்கள், தங்கள் வட்டத்துக்குள் எடுத்த முடிவை அறிவிப்பதற்காகவும், திணிப்பதற்காகவும்தான் மாநகரசபையின் கூட்டமைப்பு உறுப்பினர்களின் இரு கூட்டங்களும் கூட்டப்பட்டனவேயன்றி, அந்த உறுப்பினர்களுக்கு தலைவர் என்ற முறையில் சரியான விடயங்களைக் கூறி, அவர்களை சரியான வழியில் வழி நடத்தி அவர்கள் கருத்தறிந்து முடிவெடுக்க அல்லவென்பது வெளிப்படையானது. சுமந்திரனின் கடிதம் கூட அதனைதான் பிரதிபலித்து நிற்கிறது.

8. எது, எப்படி என்றாலும் 'காலைக் கதிர்' வாசகர்களை மதித்து, அவர்களுக்குரிய விளக்கங்களைக் கொடுத்த மாவை சேனாதிராசாவுக்கு நன்றி.

– மின்னல் –

# எமது பிள்ளைகளை உடன் ஒப்படையுங்கள்; இல்லையேல் எம்மைக் கொன்று விடுங்கள்!

## யாழில் காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் கதறல்



(எஸ்.நிதர்ஷன்)

காணாமல் ஆக்கப்பட்ட தமது உறவுகளை மீட்டுத் தருமாறு கோரி காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் இன்று யாழ்ப்பாணத்தில் கவனயீர்ப்புப் போராட்டத்தை நடத்தினர்.

நல்லூர் நல்லை ஆதீனம் முன்பாக நேற்று காலை 9 மணியளவில் இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

இதன்போது, 'எங்கள் பிள்ளைகளை எங்களிடம் ஒப்படையுங்கள்', 'இனவாதத்தைக் கக்காதீர்கள்', 'எங்கள் பிள்ளைகள் எங்களுக்கு வேண்டும்', 'தமிழர்களுக்கு ஒரு நீதி; சிங்களவர்களுக்கு ஒரு நீதியா?', 'மனிதாபிமானத்துடன் எமது பிள்ளைகளை விடுவியுங்கள்', 'இனியும் காலம் தாழ்த்தாது பிள்ளைகளை எங்களிடம் ஒப்படையுங்கள்', 'எமது உறவுகள் விடுதலை செய்யப்படும்வரை நாம் தொடர்ந்து போராடுவோம்' – எனப் பல்வேறு கோஷங்களை எழுப்பிக் கதறியழுதனர்.

காணாமல்போன எமது உறவுகளைத் தேடி எத்தனையோ தாய், தந்தையர் மற்றும் சொந்தங்கள் உயிரிழந்திருக்கின்ற நிலையிலும் போராட்டம் தொடர்ந்து கொண்டுதான் இருக்கின்றது. இவ்வாறு ஒருவர் ஒருவராக சாவதை விட எங்களை ஒட்டு மொத்தமாகக் கொன்று விடுங்கள் எனவும் இதன்போது அவர்கள் மேலும் தெரிவித்தனர்.

# காணாமலாக்கப்பட்டோர் உறவுகள் கிளிநொச்சி, மன்னாரில்; போராட்டம்





வலிந்து காணாமலாக்கப்பட்டோரின் உறவுகளால் வடக்கு, கிழக்கின் பல பகுதிகளிலும் நேற்று (புதன்கிழமை) போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

அதன்படி, கிளிநொச்சி மாவட்ட வலிந்து காணாமலாக்கப்பட்டோரின் உறவுகளால் நேற்று காலை 11.30 மணியளவில் கிளிநொச்சி மாவட்ட வலிந்து காணாமலாக்கப்பட்டோரின் உறவுகளின் சங்க அலுவலகம் முன்பாக இடம்பெற்றது.

இதன்போது காணாமலாக்கப்பட்ட தமது உறவுகளின் புகைப்படங்களையும் வாசகங்களையும் ஏந்தியவாறு ஏ9 வீதியில் கவனவீர்ப்பில் ஈடுபட்டனர்.

இதன்போது ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்த வலிந்து காணாமலாக்கப்பட்டவர்களின் உறவுகள், தமது பிள்ளைகளின் நிலை தொடர்பில் சர்வதேசமே தீர்வை பெற்றுதர வேண்டும் என வலியுறுத்தினர்.

இதேநேரம் மன்னாரிலும் வலிந்து காணாமலாக்கப்பட்டோரின் உறவினர்களால் போராட்டமொன்று முன்னெடுக்கப்பட்டது.

மன்னார் மாவட்ட வலிந்து காணாமலாக்கப்பட்டோரின் உறவுகளின் சங்கத்தால் நேற்று காலை 10.30 மணியளவில் மன்னார் நகர பஸ் தரிப்பிடத்துக்கு முன்பாக இந்த கவனவீர்ப்பு போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

காணாமலாக்கப்பட்ட தமது உறவுகளை கண்டுபிடித்து தரக்கோரியும் காணாமலாக்கப்பட்டோர் விடயத்தில் சர்வதேச விசாரனை மேற்கொள்ள வேண்டும் என வலியுறுத்தியுமே உறவுகள் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இதன்போது ஊடகங்களுக்கு கருத்து வெளியிட்ட மன்னார் மாவட்ட வலிந்து காணாமலாக்கப்பட்டோரின் உறவுகளின் சங்க இணைப்பாளர் மனுவல் உதயச்சந்திரா, 'நாங்கள் தொலைத்தது விலை மதிக்க முடியாத எமது உறவுகளை. அவர்களை தொலைத்துவிட்டு இன்று அவர்களை நாங்கள் தேடிக்கொண்டு வீதிகளில் நிற்கின்றோம். எனவே சர்வதேச விசாரனை வேண்டும் என்றே காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்களாகிய நாங்கள் கேட்கின்றோம்' எனத் தெரிவித்தார்.

# இன்றைய நாள் தீர்மானம்மிக்கது!

பண்டிகை நிகழ்வுகளை இன்று (வியாழக்கிழமை) குடும்பத்தாருடன் மாத்திரம் மட்டுப்படுத்திக்கொள்ளுமாறு பொலிஸ் ஊடகப் பேச்சாளர், பிரதி பொலிஸ் மா அதிபர் சட்டத்தரணி அஜித் ரோஹண பொதுமக்களிடம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இன்று தீர்மானம் மிக்கதாகும் என கூறிய அவர், குடும்பத்தினருடன் மாத்திரம் கொண்டாட்டங்களை மட்டுப்படுத்திக் கொள்ளுமாறு கோரியுள்ளார்.

பொதுப் போக்குவரத்து மற்றும் கொழும்பிலிருந்து வெளியேறும் பஸ்களில் இன்று மீண்டும் அதிகாரிகள் சிவில் உடையில் கடமைகளில் ஈடுபடுத்தப்பட்டிருப்பர் எனவும் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் மேலும் சுட்டிக்காட்டியுள்ளார்.

## குருகுலம் தமிழ் மொழி ஒளிபரப்பு அட்டவணை

| 31.12.2020 | வியாழக்கிழமை |
|---|---|
| 04.00 - 04.55 | தரம் - 12 பொருளியல் (த) |
| 05.00 - 05.55 | தரம் - 13 பொருளியல் (த) |
| 06.00 - 06.55 | தரம் - 12 கணக்கீடு (த) |
| 08.00 - 08.55 | தரம் - 08 தமிழ் (த)(1ஆம், 2ஆம்)<br>தரம் - 08 வரலாறு (த)(2ஆம், 4ஆம்) |
| 09.00 - 09.55 | தரம் - 09 தமிழ் (த)(1ஆம், 2ஆம்)<br>தரம் - 09 வரலாறு (த)(1ஆம், 2ஆம்) |
| 10.00 - 10.55 | தரம் - 10 விஞ்ஞானம் (த) |
| 11.00 - 11.55 | தரம் - 11 விஞ்ஞானம் (த) |
| 12.00 - 12.55 | தரம் - 12 இணைந்த கணிதம் (த) |
| 13.00 - 13.55 | தரம் - 13 இணைந்த கணிதம் (த) |
| 14.00 - 14.55 | தரம் - 07 தமிழ் (த) (1ஆம், 2ஆம்)<br>தரம் - 07 வரலாறு (த) (2ஆம், 4ஆம்) |
| 15.00 - 15.55 | தரம் - 12 வணிகக்கல்வி (த) |
| 16.00 - 16.55 | தரம் - 13 வணிகக்கல்வி (த) |
| 17.00 - 17.55 | தரம் - 13 கணக்கீடு (த) |
| 18.00 - 18.55 | தரம் - 06 சிங்களம் (த) (1ஆம், 2ஆம்)<br>தரம் - 06 வரலாறு (த) (2ஆம், 4ஆம்) |
| 22.30 - 23.25 | தரம் - 12 விவசாய விஞ்ஞானம் (த) |
| 23.30 - 24.30 | தரம் - 13 விவசாய விஞ்ஞானம் (த) |

# மாவனெல்ல புத்தர் சிலைமீது இனந்தெரியாதோர் கல் வீச்சு!



மாவனல்லை, ஹிங்குல பிரதேசத்தில் தெடிமுண்ட தேவாலயம் முன்பாக உள்ள புத்தர் சிலையை சுற்றி அமைக்கப்பட்டுள்ள கண்ணாடி மறைப்பின் மீது அடையாளம் தெரியாதோர் கல் வீச்சு தாக்குதல் நடத்தியதில், வெளிப்புற கண்ணாடி சேதமடைந்துள்ளது.

சம்பவம் தொடர்பில் விசேட விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ள நிலையில், மாவனெல்லை நகருக்கும் அதனை அண்டிய பகுதிகளுக்கும் நேற்று மாலையாகும் போது விசேட அதிரடிப் படையினர் பாதுகாப்பு பணிகளுக்காக அழைக்கப்பட்டுள்ளனர்.

இதனைவிட, இராணவத்தினரும், மேலதிக பொலிஸாரும் அப்பகுதிக்கு அழைக்கப்பட்டிருந்தனர்.

புத்தர் சிலை கண்ணாடி மறைப்பு மீதான தாக்குதலை அடுத்து, மாவனெல்லை மற்றும் ஹிங்குல நகரில் இந்த விடே பாதுகாப்பு அமுல் செய்யப்பட்டுள்ள நிலையில், விசாரணைகளுக்கு பல பொலிஸ் குழுக்கள் களத்தில் இறக்கப்பட்டுள்ளன.

நேற்றைய தினம், சம்பவம் இடம்பெற்றதாக கூறப்படும் இடத்துக்கு அரச இரசாயன பகுப்பாய்வாளரும் அழைக்கப்பட்டிருந்தார் எனப் பாதுகாப்பு தரப்பினர் தெரிவித்தனர்.

ஏற்கனவே மாவனெல்லை பகுதி கல் குவாரி ஒன்றின் களஞ்சியத்திலிருந்த வெடி பொருள்கள் காணாமல்போனமை தொடர்பில் சி.ஐ.டி.யினர் ஊடாக விடே விசாரணை நடத்தப்படும் நிலையில், இந்தச் சம்பவம் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

உயிர்த்த ஞாயிறு தின தாக்குதல்களுக்கு முன்னரும் மாவனெல்லை பகுதியில் இவ்வாறான புத்தர் சிலை தகர்ப்பு நடவடிக்கைகள் இடம்பெற்றமையால் இது குறித்து சிறப்பு விசாரணைகள் நடத்தப்பட்டு வரும் நிலையில் பாதுகாப்பும் பலப்படுத்தப்பட்டுள்ளது.

காலைக்கதிர் Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

## மாவையின் பொறுப்பு இது...!

நடந்து முடிந்த பொதுத் தேர்தல் தமிழ்த் தேசியக் கட்சிகளுக்கு – குறிப்பாகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு – சில பாடங்களை – போதனைகளை – புகட்டிச் சென்றிருந்தது.

மக்களின் கருத்து நிலைப்பாட்டின் போக்கில் ஏற்பட்ட மாறுதல்களை, சிந்தனைச் சறுக்கல்களை, எண்ணத் தடுமாற்றங்களை தேர்தல் முடிவுகள் நன்கு புலப்படுத்தி நின்றன.

தமிழர் தேசிய சிந்தனையை, அதன் மீதான தமிழ் மக்களின் வெறித்தனமான பிடிப்பை – ஈடுபாட்டை – எப்போதுமே தமது அரசியல் கோஷங்களாகவும், மூலதனமாகவும் கொண்டு, அதன் மூலம் தேர்தல் அரசியலில் வெற்றிகளையும் இலக்குகளையும் ஈட்டி வந்த அரசியல்வாதிகள், மக்களின் சிந்தனையோட்டத்தில் ஏற்பட்டு வந்த மாறுதல்களைக் கவனிக்கவேயில்லை.

அந்தச் சிந்தனையோட்ட மாறுதல்களின் பிரதிபலிப்பாகத்தான் கடந்த பொதுத்தேர்தல் முடிவுகள் அமைந்தன என்பது கண்கூடு.

பொது எண்ணவோட்டத்தில் அத்தகைய மாற்றம் ஏற்பட்டமையை அரசியல்வாதிகளும், தலைவர்களும் இன்னும் கூட உணரத் தலைப்படவில்லையோ என்றுதான் சந்தேகம் தோன்றுகின்றது.

கள யதார்த்தங்களைப் புரிந்து கொள்ளாமல் தமிழ்த் தலைமைகள் – குறிப்பாகக் கூட்டமைப்பின் தலைவர்கள் என்று சொல்லிக் கொள்பவர்கள் – செயற்படுகின்றமையால் தமிழ்த் தேசிய சிந்தனைப் போக்கே நம் தமிழ் மக்கள் மத்தியிலிருந்து அந்நியமாகிப் போய் விடுமோ என்ற அச்சம் தோன்றியிருக்கின்றது.

தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் பேச்சாளர் எம்.ஏ. சுமந்திரன் கூறுகின்றமை போல தமிழ்த் தேசிய அரசியல் களத்தில் மிக முக்கிய அடையாளம்தான் யாழ். மாநகரசபை. அதன் நிர்வாகத் தலைமையை தமிழரசு – தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு – இழந்தமை என்பது மிகச் சிறிய விடயமல்ல.

இத்தகைய மோசமான, பின்னடைவு நிலைமை ஏற்பட்டமைக்குக் கட்சியின் தலைவர் என்ற முறையில் தமிழரசுத் தலைவர் மாவை சோ.சேனாதிராசாவே முழுப் பொறுப்பையும் ஏற்க வேண்டும் எனக் குறிப்பிட்டு சுமந்திரன் சுட்டிக்காட்டும் அம்சங்கள் இலகுவில் புறந்தள்ளக் கூடியவையே அல்ல.

மாவை சேனாதிராசா இவ்விடயத்தில் தன்னிச்சையாக நடந்து கொண்டார், ஜனநாயக விரோதமாகச் செயற்பட்டார், சட்டவிரோதமாகக் காரியமாற்றியிருக்கின்றார் என விலாவாரியாக விடயங்களை அடுக்கியிருக்கின்றார் சுமந்திரன்.

சுமந்திரன் சொல்லும் குற்றச்சாடுக்களில் உண்மை இருக்கலாம், அல்லது அவை பொய்யாகவும் கூட இருக்கலாம்.

ஆனால் ஒரு விடயம் உண்மையானது, யாதார்த்தமானது.

அது – போட்டியின்றியே இந்த மேயர் பதவியைத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு – தமிழரசு – தக்க வைத்திருக்க முடியும் என்பது நூற்றுக்கு இருநூறு வீதம் அப்பட்டமான உண்மை.

வரவு – செலவுத் திட்டத்தில் இரண்டு முறை தோற்கடிக்கப்பட்டு, அதனால் ஜனநாயக விழுமியங்கள், மாண்புகளின் அடிப்படையில் அந்த முதல்வர் பதவிக்குத் தேர்வாகும் தார்மீகத் தகுதியை இழந்து விட்டவரை, தனது தனிப்பட்ட விருப்புக்காக – சுயநல அரசியல் தேவைகளுக்காக – கட்சியின் முதல்வர் வேட்பாளராக மீண்டும் நியமித்து, அதனைக் கட்சி முடிவாகத் திணித்து, அல்லது அந்த முடிவுக்குத் தானும் சேர்ந்து இணங்கி, முதல்வர் பதவியே கட்சியை விட்டுப் பறிபோகும் அரசியல் முட்டாள்தனத்தைப் புரிந்தமை தமிழர் தேசிய அரசியலில் பெரும் பின்னடைவான நடவடிக்கைதான்.

தமிழ்த் தேசிய அரசியல் களத்திலே மிக முக்கிய அடையாளமான யாழ் நகரத்தின் முதல் பிரஜையைத் தீர்மானிக்கும் தேர்தலில் தீர்க்கமான முடிவை எடுக்கும் வாய்ப்பை – சந்தர்ப்பத்தை – பௌத்த, சிங்களப் பேரினவாத அரசுக்கு முண்டு கொடுக்கும் கட்சியிடம் கையளிக்கும் விதமான அரசியல் தந்திரோபாயத்துக்கு வழிசமைத்துக் கொடுத்த தமிழரசுத் தலைவர் மாவை சேனாதிராசாவும், அவருக்கு இத்தகைய திட்டங்களை வகுத்துக் கொடுக்கும் உதவியாளர்களும் குறைந்த பட்சம் கட்சி மட்டத்திலாவது இந்தக் கோமாளித்தன வேலைக்குப் பதில் கூறக் கூடியவர்களாக நிறுத்தப்படுவதுதான் சரியான ஜனநாயகமாக இருக்க முடியும்.

கையில் இருந்த 'மேயர்' பதவியைத் தூக்கி வீசும் சின்னத்தனம்தான் தனது இத்தகைய நீண்ட கால அரசியல் அனுபவத்தின் முதிர்ச்சி என்பதை மாவை உணர்ந்து கொள்வாரோ என்னவோ...?

சரியோ, பிழையோ, நல்லதோ, கெட்டதோ, கூட்டமைப்பிடமிருந்து மாவையின் அற்பத்தன தலைமைத்துவப் போக்கால் தவறவிடப்பட்ட மேயர் பதவி, தமிழ்த் தேசிய சிந்தனையுடைய தரப்புகளின் கைகளில்தான் வீழ்ந்துள்ளது.

அந்தத் தரப்புகள், அதைத் தக்கவைப்பதற்கு தமிழ்த் தேசிய விரோதப் போக்காளரின் தயவை நாடிச் செல்லாமல், தமிழ்த் தேசிய சிந்தனைப் போக்குடைய கூட்டமைப்பு போன்ற சக்திகளில் தங்கியிருக்கும் நிலையை உறுதிப்படுத்துவதன் மூலமாக தாம் இழைத்த தவறுக்குப் பிராயச்சித்தம் செய்ய மாவை சேனாதிராசா போன்றோர் முன்வரவேண்டும். அது அவர்களின் வரலாற்றுப் பொறுப்பு.

## ஜனவரியில் விமான நிலையம் உத்தியோகபூர்வமாக திறப்பு!



ஜனவரி மாதம் நடுப்பகுதியில் விமான நிலையங்கள் உத்தியோகபூர்வமாகத் திறக்கப்படும் என சுற்றுலாத்துறை அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்தார்.

கொரோனாத் தொற்று அச்சுறுத்தல் காரணமாக இலங்கையின் அனைத்து சர்வதேச விமான நிலையங்களும் மூடப்பட்டுள்ளன.

இந்த நிலையில், தற்போது பைலட் திட்டத்துக்கு அமைவாக குறைந்த அளவிலான சுற்றுலாப் பயணிகளை அழைப்பிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

அதற்கிணங்க, ஜனவரி மாதம் நடுப்பகுதியில் விமான நிலையங்கள் உத்தியோகபூர்வமாகத் திறக்கப்படும் என சுற்றுலாத்துறை அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்தார்.

வீழ்ச்சியடைந்துள்ள சுற்றுலாத்துறை குறுகிய காலத்தில் மீள் கட்டியெழுப்பும் நோக்கிலேயே இந்த நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

வைரஸ் தாக்கத்தை கட்டுப்படுத்தும் சுகாதார வழிமுறைகளை முழுமையாகச் செயற்படுத்தி எதிர்வரும் ஜனவரி மாதம் நடுப்பகுதியில் விமான நிலையம் திறக்கப்படும். அத்துடன் வணிக விமான சேவைகளும் ஆரம்பிக்கப்படும் என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

சுற்றுலா பிரயாணிகளால் வைரஸ் தொற்று ஒருபோதும் பரவலடையாது. சுற்றுலாத்துறை அமைச்சு அனுமதி வழங்கியுள்ள ஹோட்டல்களில் மாத்திரமே தங்க முடியும்.

சுற்றுலாப் பிரயாணிகளைக் கண்காணிப்பதற்காக விசேட நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளதாகவும் அவர் கூறியுள்ளார்.

அதேநேரம், வெளிநாடுகளில் உள்ள இலங்கையர்களை நாட்டுக்கு வரவழைக்கும் நடவடிக்கை தொடர்ந்து முன்னெடுக்கப்படும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

## அன்டிஜன் பரிசோதனையில் 74 தொற்றாளர் அடையாளம்!

மேல் மாகாணத்தில் இருந்து வெளியேறுபவர்ளை அடையாளம் காண்பதற்காக வெளியேறும் இடங்களில் எழுமாறாக மேற்கொள்ளப்படும் அன்டிஜன் பரிசோதனைகளில் மேலும் 13 கொரோனாத் தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

இதனையடுத்து, இந்த பரிசோதனை மூலம் இதுவரை 74 கொரோனா நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர் என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கடந்த டிசெம்பர் 18 ஆம் திகதி முதல் மேல் மாகாணத்தைவிட்டு வெளியேறுபவர்களை அடையாளம் காண்பதற்காக மேற்கொள்ளப்பட்ட அன்டிஜன் பரிசோதனைகளின் எண்ணிக்கை 10 ஆயிரத்து 986 ஆக அதிகரித்துள்ளது.

இந்த நிலையில், இந்த அன்டிஜன் சோதனைகள் ஜனவரி 5 ஆம் திகதி வரை தொடர்ந்து மேற்கொள்ளப்படும் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

## கொள்ளுப்பிட்டியில் கட்டடத்தின் கீழ்தளம் நீரில் மூழ்கி ஒருவர் சாவு!

கொழும்பு – கொள்ளுப்பிட்டியில் கட்டடம் ஒன்றின் கீழ்தளம் நீரில் மூழ்கியதில் ஒருவர் உயிரிழந்துள்ளார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

கொழும்பில் கடந்த (செவ்வாய்க்கிழமை) இரவு பெய்த மழையால் கொள்ளுப்பிட்டி – டுப்ளிகேன் வீதியில் நிர்மாணிக்கப்பட்டு வரும் கட்டடம் ஒன்றின் கீழ்தளமே இவ்வாறு நீரில் மூழ்கியுள்ளது.

இந்தக் கட்டட நிர்மாணப் பணியில் ஈடுபடுகின்ற ஒருவரே இவ்வாறு உயிரிழந்தார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

அதேநேரம் இந்தக் கட்டடத்தின் கீழ்தளத்தில் மேலும் 5 பேர் சிக்கி இருந்த நிலையில் பாதுகாப்பாக மீட்கப்பட்டனர்.

இந்த நிலையில் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

## வெளிநாட்டிலிருந்து பலர் தாய்நாடு திரும்பினார்கள்!

கொரோனா வைரஸ் தொற்று காரணமாக வெளிநாடுகளில் சிக்கித் தவித்த 337 இலங்கையர்கள் இன்று (புதன்கிழமை) காலை நாட்டை வந்தடைந்தனர்.

அதன்படி, ஐக்கிய அரபு இராச்சியத்திலிருந்து 305 பேர், மாலைதீவிலிருந்து 25 பேர் மற்றும் கட்டாரிலிருந்து 7 பேர் கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்தனர் என கொவிட் – 19 தடுப்புக்கான தேசிய செயற்பாட்டு மையம் தெரிவித்துள்ளது.

இவ்வாறு நாட்டை வந்தடைந்த அனைவருக்கும் பி.சி.ஆர். பரிசோதனை மேற்கொள்ளப்பட்டு பின்னர் அனைவரும் தனிமைப்படுத்தல் நடவடிக்கைகளுக்காக அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர்.

இதேவேளை, மேலும் 150 பேர் நாட்டுக்கு வருகை தரவுள்ளனர் என கொவிட் – 19 தடுப்புக்கான தேசிய செயற்பாட்டு மையம் தெரிவித்துள்ளது.

அதன்படி ஐக்கிய அரபு இராச்சியம், இந்தியா, மாலைதீவு, பங்களாதேஷ், சிங்கப்பூர் மற்றும் சீனா ஆகிய நாடுகளிலிருந்து மேலும் 150 பேர் நாட்டுக்கு வருகை தரவுள்ளனர் என அந்த மையம் தெரிவித்துள்ளது.

## 12 மணி நேரத்தில் திருமலையில் 7 பேருக்குக் கொரோனாத் தொற்று!

திருகோணமலையில் நேற்று முன்தினம் 7 புதிய கொரோனா தொற்றாளர்கள் அடையாளங்காணப்பட்டுள்ளனர்.

அதன்படி குச்சவெளியில் ஒருவருக்கும் மூதூரில் 5 பேருக்கும் உப்புவெளியில் ஒருவருக்கும் கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

அதற்கமைய திருகோணமலையின் கொரோனாத் தொற்றுக்கு உள்ளானவர்களின் மொத்த எண்ணிக்கை 134 ஆக அதிகரித்துள்ளது.

அதன்படி கோமரங்கடவலயில் இதுவரையில் 3 பேருக்கு தொற்று உறுதி செய்யப்பட்டுள்ள அதேநேரம், கிண்ணியாவில் மொத்தமாக 11 பேருக்குத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

அத்தோடு, குச்சவெளியில் 2 பேருக்கும் மூதூரில் மொத்தமாக 41 பேருக்கும் சேருவிலயில் 3 பேருக்கும் இதுவரையில் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

மேலும் தம்பலகாமன் பகுதியில் 6 பேருக்கும் திருகோணமலையில் 64 பேருக்கும் உப்புவெளியில் 4 பேருக்கும் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

### தன்னிச்சையான, ஜனநாயக விரோத, சட்டவிரோதமான

# மாவையின் செயற்பாட்டினால்தான் யாழ். மாநகர சபையை இழந்தோம்

## சுமந்திரன் காட்டமான கடிதம்



யாழ்ப்பாணம்,டிசெம்பர் 31

"உங்களுடைய தன்னிச்சையான, ஜனநாயக விரோத, சட்டவிரோத செயற்பாட்டினால் போட்டியின்றி வென்றிருக்க வேண்டிய யாழ் மாநகர சபை முதல்வர் பதவியை நாம் இழந்திருக்கின்றோம்.

"தமிழ்த்தேசிய அரசியல் களத்தில் மிக முக்கிய அடையாளமான யாழ் மாநகர சபை தலைமையை எமது கட்சி இழந்தமைக்கு மேற்சொல்லப்பட்ட தங்களது நடவடிக்கைகளே காரணமாகும் என்பதையும், இதனால் ஏற்படும் கட்சியின் பின்னடைவுக்கும் தாங்களே முழுப் பொறுப்பையும் ஏற்க வேண்டும் என்பதையும் இத்தால் பதிவு செய்கின்றேன்."

– இவ்வாறு காட்டமாகத் தெரிவிக்கும் கடிதம் ஒன்றை இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராசாவுக்கு அனுப்பி வைத்திருக்கின்றார் கட்சியின் பிரதிப் பொதுச்செயலாளரும் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான எம்.ஏ. சுமந்திரன்.

நேற்றுக் காலை யாழ். மாநகரசபை மேயர் தெரிவு நடந்த கையோடு இந்தக் கடிதத்தை அவர் அனுப்பி வைத்திருக்கின்றார். அந்தக் கடிதத்தின் முழு விவரம் வருமாறு:–

திரு. மாவை சேனாதிராசா
தலைவர்
இலங்கை தமிழ் அரசுக் கட்சி
30, மார்டின் வீதி
யாழ்ப்பாணம்
ஐயா,
யாழ்ப்பாண மாநகர சபை

இன்று யாழ் மாநகர சபை மேயர் தேர்வில் தமிழ் தேசிய கூட்டமைப்பு தோல்வியடைந்துள்ளது.

வரவு – செலவு திட்ட முன்மொழிவில் இரண்டு தடவைகள் தோல்வியுற்ற காரணத்தால் எமது மேயர் பதவி இழந்ததை அடுத்து நடந்த நிகழ்வுகளை இங்கே வரிசைப்படுத்த விரும்புகிறேன்:–

19/12/20 அன்று தமிழ் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தன் ஐயாவின் இல்லத்தில் சந்தித்ததை அடுத்து, வீட்டுவாசலில் வைத்து யாழ்மாநகர சபைக்கு புதிய மேயர் வேட்பாளராக வேறொருவரை நியமிப்பதே உசிதம் என்றும் அதற்குப் பொருத்தமானவர் முன்னால் நாடாளுமன்ற உறுப்பினர்

திரு. சொலமன் சிறில் என்பது என்னுடைய கருத்து என்பதையும் கூறினேன்.

21/12/20 அன்று நீங்கள் எனக்குத் தொலைபேசி அழைப்பு எடுத்து, நான் சொன்ன கருத்தோடு நீங்கள் உடன்படுவதாகவும் இது சம்பந்தமாக பாராளுமன்ற உறுப்பினர் திரு. சிவஞானம் சிறிதரனின் கருத்தும் திரு. சொலமன் சிறில் என்பதே என்றும் சொன்னீர்கள். நீங்கள் யாழ்ப்பாணம் செல்வதாகவும் அங்கே உறுப்பினர் களோடு நடாத்தும் கூட்டத்திற்கு என்னை வரமுடியுமா என்றும் கேட்டீர்கள். கட்சியின் சார்பில் அரசமைப்பு யோசனைகள் நிறைவு செய்யும் வரை என்னால் வரமுடியாது என்றும் திருசொலமன் சிறில் வேட் பாளராக வருவதில் எனக்கு உடன்பாடு உள்ளது என்றும் கூறினேன். எப்படியாயினும் இறுதிமுடிவு எடுப்பதற்கு முன்பதாக என்னோடு திரும்பவும் பேசுவதாக கூறி யிருந்தீர்கள்.

எட்டு நாட்களுக்குப்பிறகு நேற்றைய தினம் 29/12/2020 காலையில் நீங்கள் எனக்குத. தொலைபேசி அழைப்பெடுத்து மாநகரசபை உறுப்பினர்களில் அநேக

மானவர்கள் திரு ஆர்னோல்டையே

திரும்பவும் வேட்பாளராக நிறுத்த வேண்டும் என்று விரும்புவதாகவும், இறுதித் தீர்மானம் எடுப்பதற்காக காலை 10.30 மணிக்கு கூட்டம் ஒன்று நடத்தப் போவதாகவும் சொன்னீர்கள்.

நான் கொழும்பில் இருந்து பிரயாணமாகி வந்துகொண்டிருக்கின்றேன் என்றும் மதியம் 1 மணிக்குப் பின்னரே யாழ்ப்பாணத்திற்கு வந்தடைவேன் என்றும் அதற்குப் பின்னர் கூட்டத்தை நடாத்தினால் நான் கலந்து கொள்வேன் என்றும் உங் களுக்கு நான் அறியத்தந்தேன்.

அதே தொலைபேசி உரையாடலில், புதிய மேயர் வேட்பாளர் சம்பந்தமாக எனது நிலைப்பாட்டைத் தெளிவாக திரும்பவும் கூறினேன்:–

வரவு – செலவுத் திட்டம் தோல்வியுற்றால் இராஜிணாமா செய்ய வேண்டியது ஒரு ஜனநாயக விழுமியம் மட்டும்அல்ல, அது ஒரு ஜனநாயக மரபாகவும் இருந்திருக்கின்றது. இந்த மரபு பின்பற்றப்படாத காரணத்தால்தான் சட்டத்தில் திருத்தங்கள் செய்யப்பட்டு இராஜினாமாச் செய்தவராக கருத வேண்டும் என்று அது ஒருசட்டத்

தின் தேவைப்பாடாகவும் ஏற்படுத்தப் பட்டது.

சட்டத்தின் செயற்பாட்டினால் இராஜினாமா செய்தவர் ஆனவர் மீண்டும் அப்பதவிக்குப்போட்டியிடுவது சட்டத்திற்கு முரணானது மட்டும் அல்லாமல் ஜனநாயக விழுமியங்களையும் மீறுகின்ற செயலாகும்.

ஆகையால் இராஜினாமா செய்தவரான ஆர்னோல்ட்டைத்தவிர வேறொருவரைத் தான் எமது வேட்பாளராகதெரிவு செய்ய வேண்டும் என்பதை திட்டவட்டமாக சொன்னேன்.

வரவு – செலவுத்திட்டத்தின் தோல்வியின் காரணமாக இராஜினாமா செய்தவர்களை மீளவும் வேட்பாளர்களாக நிறுத்தினால் தமது கட்சி அதை எதிர்க்கும் என்றும், அப்படி அல்லாது வேறு எவரையேனும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நிறுத்தினால், தாம் ஆதரவு கொடுப்போம் என்றும் சில நாள்களுக்கு முன்னர் தமிழ்த் தேசிய மக்கள் முண்ணனித. தலைவர் திரு கஜேந்திரகுமார் பொன்னம்பலம் பகிரங்கமாக அறிவித்திருந்தார். இவ் அறிவிப்பு எமது கட்சி வேட்பாளரை வேறு கட்



சியினர் தெரிவு செய்யும் செயற்பாடு அல்ல. நான் மேற்சொன்ன ஜனநாயக விழுமியத்தின் அடிப்படையிலான அறிவிப்பே அது.

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் யாழ்ப்பாண மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள் இருவரினதும் கருத்துக்கு மாறாகவும், நீங்கள் எனக்குச் சொன்ன தங்களது சொந்தக. கருத்துக்கே மாறாகவும், தன்னிச்சையாக நேற்று காலை 10.30 மணிக்கு இலங்கைத் தமிழரசுக் கட்சிக்கு ஒதுக்கப்பட்ட யாழ் மாநகர சபை மேயர் பதவிக்கு, ஏற்கனவே இராஜனாமா செய்தவரான திரு ஆர்னோல்ட்டையே வேட்பாளராக அறிவித்திருந்தீர்கள்.

உங்களுடைய மேற்சொன்ன, தன்னிச்சையான, ஜனநாயக விரோத, சட்டவிரோத செயற்பாட்டினால் போட்டி யின்றி வென்றிருக்க வேண்டிய யாழ் மாநகர சபை முதல்வர் பதவியை நாம் இழந்திருக்கின்றோம்.

தமிழ்த்தேசிய அரசியல் களத்தில் மிக முக்கிய அடையாளமான யாழ் மாநகர சபை தலைமையை எமது கட்சி இழந்தமைக்கு மேற்சொல்லப்பட்ட தங்களது நடவடிக்கைகளே காரணமாகும் என்பதையும், இதனால் ஏற்படும் கட்சியின் பின்னடைவுக்கும் தாங்களே முழுப் பொறுப்பையும் ஏற்க வேண்டும் என்பதையும் இத்தால் பதிவு செய்கின்றேன்.

இப்படிக்கு,
எம்.ஏ.சுமந்திரன்
பா. உ. யாழ் மாவட்டம்
பிரதி பொதுச்செயலாளர்
இலங்கை தமிழ் அரசுக் கட்சி
–என்று உள்ளது.

## மட்டு போதனா வைத்தியசாலையில் 2 ஆவது கொரோனா மரணம் பதிவு!

மட்டக்களப்பு வைத்தியசாலையில் கொரோனா தொற்றுக்குள்ளாகி சிகிச்சை பெற்று வந்த நபர் ஒருவர் நேற்று புதன்கிழமை காலை உயிரிழந்துள்ளார்.

மட்டக்களப்பு கொத்தியவளை பகுதியில் வசிக்கும் 63 வயது மதிக்கத்தக்க ஒருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார் என கிழக்கு மாகாண சுகாதார பணிப்பாளர் வைத்தியர் அ.லதாகரன் தெரிவித்துள்ளார்.

மட்டக்களப்பு போதனா வைத்தியசாலை 38 ஆம் விடுதி பகுதியில் சிகிச்சை பெற்று வந்த ஒருவர் ஏற்கனவே உயிரிழந்த நிலையில் தற்போது இரண்டாவது நபரும் உயிரிழந்துள்ளார் எனத் தெரியவருகின்றது.

மஞ்சள் கன்றுகள் விற்பனைக்கு!

நல்ல தரமான இரண்டு அடி வரை வளர்ந்த
ஒன்றரை மாத மஞ்சள் கன்றுகள்
யாழ்ப்பாணத்தில் விற்பனைக்கு உண்டு.
விலை - 150/=







கற்பகவனம் விற்பனை நிலையம்.
461, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
(யாழ் முற்றம் - Yarl Muttam)
021 492 7778

லக்சுமி வெதுப்பகம்
ஆறுகால் மடம்

## கொழும்பு தீயணைப்புப் பிரிவின் அவசர சேவை இலக்கம் மாற்றம்!

கொழும்பு, நவ.31

கொழும்பு மாநகராட்சியின் தீயணைப்பு சேவைத் துறையின் அவசர தொலைபேசி இலக்கம் சீரற்ற வானிலை காரணமாக தற்காலிமாக பாதிக்கப்பட்டுள்ளது.

பிரதான அவசர இலக்கம் மீள்திருத்தம் செய்யப்படும் வரை 0112-422222, 0714-466232 அல்லது 0714 - 274161 என்ற இலக்கங்கள் ஊடாக தீயணைப்பு சேவைகள் துறையை தொடர்பு கொள்ளுமாறு அரசாங்க தகவல் திணைக்களம் வலியுறுத்தியுள்ளது.

## 450 கைதிகளின் தண்டனையை குறைக்க ஜனாதிபதிக்கு பட்டியல்!

சிறைக்கைதிகளுக்கு விதிக்கப்பட்டுள்ள தண்டனைகளை குறைக்கும் திட்டத்தின் கீழ், சுமார் 450 கைதிகளின் தண்டனைகள் குறைக்கப்படவுள்ளன.

இதனையடுத்து, தண்டனைகளைக் குறைப்பதற்கு பரிந்துரைக்கப்பட்ட கைதிகளின் பெயர்ப் பட்டியல், ஜனாதிபதியின் அனுமதிக்காக அனுப்பப்பட்டுள்ளதாக சிறைச்சாலைகள் முகாமைத்துவம் மற்றும் கைதிகள் புனர்வாழ்வு இராஜாங்க அமைச்சர் லொஹான் ரத்வத்தே தெரிவித்துள்ளார்.

இதற்கான அனுமதி கிடைக்கப்பெற்றதுடன், உடனடியாகக் கைதிகளுக்கான தண்டனைகள் குறைக்கப்படும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதற்கமைய, மரண தண்டனை விதிக்கப்பட்டுள்ள கைதிகளுக்கு ஆயுள் தண்டனை வழங்கப்படவுள்ளது.

மேலும் ஆயுள் தண்டனை விதிக்கப்பட்டுள்ள கைதிகளுக்கு அந்த தண்டனை 20 வருடங்கள் வரை குறைக்கப்படவுள்ளதாக சிறைச்சாலைகள் இராஜாங்க அமைச்சர் தெரிவித்துள்ளார்.

இதற்கு முன்னர், கைதிகளுக்கான தண்டனை குறைக்கும் இந்த திட்டம் முன்னெடுக்கப்பட்ட போதிலும் 22 வருடங்களுக்கு முன்னர் அது கைவிடப்பட்டதாகவும் இராஜாங்க அமைச்சர் லொஹான் ரத்வத்தே குறிப்பிட்டுள்ளார்.

காலைக்கதிர்
Kalaikkathir




# விடைகொடுத்தோம் – போய்வா




# GOOD BYE

## கழியும் ஆண்டின் கொடூரம் புத்தாண்டில் நீங்குமா?




- நிலா ரமேஷ் -

சில இரவுகளில் துர்கனவு கண்டிருப்போம். அந்தக் கனவு எம்மைப் பயம் கொள்ளச் செய்யும். உறக்கம் கலைந்த பின்னரும் கூட அந்தக் கனவின் காட்சிகள் எம்மை துரத்திக் கொண்டே இருக்கும். அதில் இருந்து விடுபட முடியாமல் அந்த நாள் முழுவதும் இறுக்கமாக உணர்வோம். எப்படியாவது அந்த இருளில் இருந்து ஓடி வெளிச்சத்துக்கு வரப் போராடுவோம். 2020 ஆம் ஆண்டு இப்படித்தான். இந்த வருடம் முழுவதுமே திகிலூட்டும் கனவுகள் போல பல பயங்கர மான நிகழ்வுகள் எல்லோரையும் தொடர்ந்துகொண்டே இருந்தன.

ஆஸ்திரேலியாவில் ஏற்பட்ட காட்டுத் தீயால் இலட்சக் கணக்கில் மடிந்துபோன வனவிலங்குகளின் கருகிய உடல்களோடுதான் 2020 ஆம் ஆண்டு மலர்ந்தது.

2019ஆம் ஆண்டு நடுப்பகுதியில் தொடங்கிய காட்டுத்தீ 2020 ஜனவரியில் உக்கிரமடைந்தது. இந்தக் காட்டுத் தீயால் ஆஸ்திரேலியாவில் அவசர நிலை பிரகடனம் செய்யப்பட்டது. ஆண்டின் தொடக்கமே இத்தனை உயிர்ப்பலிகளோடு இருந்ததைக் கண்டு உலகமே சற்றுக் கலங்கித்தான் போனாது.

இதிலிருந்து மக்கள் தங்களை கொஞ்சம் ஆசுவாசப்படுத்துவதற்குள் ஜனவரி 23இல் சீனாவில் ஒரு வைரஸ் தொற்றுக்கு இலக்கானவர்கள் கண்டறியப் படுகின்றனர். சீனாவில் கண்டறியப்பட்ட வைரஸ் 'கொவிட் - 19' என பெப்ரவரி 11இல் உலக சுகாதார அமைப்பு அறிவித்தது. மார்ச் மாதம் உலகளவில் கொரோனாத் தொற்றுக்கு இலக்கானவர்கள் இலட்சங்களைத் தொட்டனர். உயிரிழந்தோர் எண்ணிக்கை பல ஆயிரங்களை நெருங்கியது. தொடர்ந்து கொரானா வைரஸ் ஒரு பெருந்தொற்று என உலக சுகாதார அமைப்பு அறிவித்தது. உலக நாடுகள் அனைத்தும் முடங்கின. நோய்த் தொற்று, உயிரிழப்பு, பொது முடக்கம் என மக்கள் ஸ்தம்பித்து போனார்கள்.

இதற்கிடையில் இந்த ஆண்டின் கோரத்தாண்டவம் வெவ்வேறு அனர்த்தங்கள் மூலம் ஆங்காங்கே தொடர்ந்து கொண்டுதான் இருந்தது.

ஏப்ரல் 19இல் கனடாவில் தனிநபர் ஒருவர் நடத்திய துப்பாக்கிச் சூட்டில் 20க்கு மேற்பட்டோர் உயிரிழந்தனர். இந்தியாவின் ஆந்திரப் பிரதேசத்தில் ஏற்பட்ட விஷ வாயுக் கசிவும் மரணங்களும் இந்தியாவில் உருவான அம்பன் புயலும் சாவுகளும் பாகிஸ்தான் ஏயர்லைன்ஸ் விமான விபத்து, ஜுலை மாதம் மியன்மார் நாட்டு சுரங்கத்தில் ஏற்பட்ட நிலச்சரிவில் 100க்கு மேற்பட்டோர் பலியானமை, அதே மாதம் சீனாவில் ஏற்பட்ட வெள்ளமும் நிலச்சரிவும், இந்தியாவின் பிரமபுத்திரா நதியில் ஏற்பட்ட வெள்ளமும் உயிரிழப்புக்களும், ஓகஸ்ட் மாதம் இந்தியாவின் கோழிக்கோடு விமான நிலையத்தில் ஏற்பட்ட விபத்து, இலங்கை, இந்தியாவை இலக்கு வைத்த புரெவிப் புயல் என மூச்சு முட்டும் அளவுக்கு அனர்த்தங்கள் நிகழ்ந்து முடிந்தன. ஆனாலும் கொரோனாப் பரவல் அதிகரித்துக் கொண்டுதான் இருந்தது. மருத்துவ உலகமும் தடுப்பூசி கண்டுபிடிக்கும் முயற்சியில் போராடிக் கொண்டுதான் இருக்கிறது. இதற்கிடையில் பிரிட்டனில் புதிதாக உருமாற்றம் அடைந்த கொரோனா வைரஸ் பற்றிய செய்திகள் 2021இல் எப்படியாவது கண்டறியப்பட்டு விடும் என நம்பிக் கொண்டு இருந்தவர்களுக்கு பேரிடியாக மாறியது.

இப்படி எந்தப் பக்கம் திரும்பினாலும் அடி இந்த ஆண்டு ஏன் இவ்வளவு எதிர்மறையாக இருக்க வேண்டும் என்பதும் 2021ஆம் ஆண்டும் இவ்வாறு அமைந்துவிடுமோ என்பதுதான் இப்போது எல்லோரின் கவலையாக இருக்கிறது.

ஆனால் ஊடகங்களில் பயன்படுத்தப்படும் உருமாறிய கொரோனா என்ற பதம் தவறு என்றும் இந்த வைரஸ் வேறொன்றாக உருமாறவில்லை. மாறாக, தன்னகத்தே சிறு மாற்றங்களைக் கண்டு வருகின்றது என மருத்துவர்கள் சொல்கின்றனர்.

இந்த வைரஸ் உலகத்தின் பல்வேறு நிலப்பரப்புகளில் வாழும் பல கோடி மக்களை புதிதாக சந்திக்கும்போது தன்னகத்தே பல மரபணு மாற்றங்களை சந்திப்பதாக மருத்துவர்கள் மற்றும் ஆராய்ச்சியாளர்கள் தெரிவிக்கின்றனர். இந்தக் கொரோனா வைரஸ் இதுவரை பலமுறை மரபணுமாற்றம் அடைந்திருக்கின்றது. இது இயற்கையானது என்பதே மருத்துவ உலகத்தில் கருத்தாக உள்ளது. அதனால் இதைக் கண்டு மக்கள் பீதியடையத் தேவையில் அதே நேரம் முன்னெச்சரிக்கை இல்லாமலும் இருக்கக் கூடாது.

இந்தக் கொரோனா மருத்துவ உலகத்துக்கு ஒன்றும் புதிய சவால் அல்ல. இதுவரை பல கொள்ளை நோய்களையும் கிருமிகளையும் இழப்புக்களையும் கண்டிருக்கின்றது. அதில் இருந்து மீண்டும் வந்திருக்கின்றது. சாதித்தும் இருக்கின்றது.

1988 ஆம் ஆண்டளவில் உலகம் முழுவதும் மூன்று இலட்சத்து 50ஆயிரம் பேர் போலியோவால் பாதிக்கப்பட்டிருந்தனர். அவர்களில் 70ஆயிரம் பேர் ஆபிரிக்காவில் மட்டும் பாதிக்கபட்டிருந்தனர். ஆனாலும் உலக சுகாதார அமைப்பின் முயற்சியால் கடந்த நான்கு ஆண்டுகளாக ஆபிரிக்காவில் யாருக்கும் போலியோ பாதிப்பு ஏற்படவில்லை. இதற்கு முன்னர் பெரியம்மையில் இருந்து இப்படித்தான் விடுபட்டது.

2020ஆம் ஆண்டின் மருத்துவத்துக்கான நோபல் பரிசு அமெரிக்க விஞ்ஞானிகளாக ஹார்வி ஜே. ஆல்ட்டர், சார்ஸ்லஸ் எம். ரைஸ், பிரிட்டன் விஞ்ஞானியான மைக்கல் ஹாவ்டன் ஆகிய மூவருக்கும் 'ஹெபடைடிஸ் சி' வைரஸைக் கண்டு பிடித்ததாக வழங்கப்பட்டிருக்கின்றது. இந்தப் பரிசு கொரோனாவுக்கு எதிராகப் போராடிக் கொண்டிருக்கும் மருத்துவ உலகத்துக்கு இன்னும் தன்னம்பிக்கை அளிப்பதாகவே உள்ளது. இதைப்போலவே நீங்களும் இந்த இருள் சூழ்ந்த நாள்களுக்கு 'குட்பை' சொல்விட்டு 2021ஆம் ஆண்டை நம்பிக்கையோடு எதிர்கொள்ளுங்கள். சபிக்கப்பட்ட வாழ்வென்று இங்கு எதுவும் இல்லை.

"நீ எந்தளவுக்கு துயரத்துக்கு தயாராக இருக்கிறாயோ அந்தளவுக்கு மகிழ்ச்சியோடு இருப்பாய்" என்ற ஓசோவின் வரிகள் இந்த மலரப்போகும் ஆண்டில் உங்களுக்கு நம்பிக்கையையும் உத்வேகத்தையும் அளிக்கட்டும்.

# உடன் கட்டையேறுகின்றதா உல்லாசப் பயண, சுற்றுலாத் துறை?

சி.யதுராஜ்

2020 ஆம் ஆண்டைப் பற்றி பேசும் போது கொரோனாவை பற்றி பேசாமல் கடந்து செல்ல முடியாது. கொரோனா வைரஸ் நோய்த் தொற்றானது பல்வேறு நெருக்கடிக்குள் மக்களையும் பல நாடுகளின் அரசாங்கத்தையும் முடக்கி விட்டிருக்கின்றது.

ஆரம்பத்தில் 6,7 மாதங்களில் நிலைமை வழமைக்குத் திரும்பும் என எல்லோராலும் பேசப்பட்டிருந்தாலும் ஒரு வருட காலத்தை தாண்டி கொரோனா வானது தனது தாண்டவத்தை தொடர்ந்த வண்ணம் உள்ளது.

கடந்த மார்ச் நடுப்பகுதியில் இலங்கை நாடு தழுவிய முடக்க நிலைக்கு சென்றிருந்தாலும், 2020 இன் ஆரம்பத்திலேயே சுற்றுலாத்துறையானது படிப்படியாக முடக்க நிலைக்கு வந்து விட்டது என்றே கூற வேண்டும்.



சீனாவில் ஆரம்பித்த கொரோனா ஆரம்பத்தில் உலக மக்கள் மத்தியில் ஒரு பொருட்டாக எடுக்கப்படா விட்டாலும் அதன் வீரியத்தன்மையும் உயிரிழப்புகளும் ஏனைய நாடுகளுக்கு பரவலடைந்த வேகமும் பல நாடுகளில் விமான நிலையங்களின், விமான நிறுவனங்களின் மற்றும் சேவைகளை கட்டம் கட்டமாக முடக்கும் நிலைக்குத் தள்ளியது.

ஆரம்பத்தில் பல விமான நிறுவனங்களும் தமது சீன வழித் தடங்களுக்கான சேவையைத் தற்காலிகமாக நிறுத்தி வைத்தன.

பெரும்பாலான நாடுகளின் பொருளாதார வளர்ச்சியில் சுற்றுலாத்துறையானது கணிசமான பங்கை வழங்கி வந்த நிலையில் இந்த பயணக் கட்டுப்பாடுகள் பல நாடுகளின் சுற்றுலாத் துறையை ஆட்டங்காண வைத்ததுடன் பலரின் தொழில் வாய்ப்புக்களையும் பறிக்கத் தவறவில்லை.

சுற்றுலாப் பயணிகளின் வருகையின்மையால் பல நட்சத்திர விடுதிகள், தங்குமிடங்கள், ஹோட்டல்கள் போன்றவற்றில் பணிபுரிவோரின் வேலை வாய்ப்புகள் ஆரம்பத்தில் சம்பளக் குறைப்பு, பின்னர் வேலை முடக்கம், தொடர்ந்து பணி நீக்கமாகவும் வளர்ந்து சென்றது.

இதற்கும் அப்பால் பல நிறுவனங்கள் நிதி புரள்கை இல்லாமல் நெருக்கடி காரணமாக மூடு விழாக்களும் நடக்கின்றன.

அதன் காரணமாக பல பணியாளர்கள் தமது வாழ்வாதாரத்தை கொண்டு செல்லும் பொருட்டு சுய தொழில் மற்றும் விவசாயம், உற்பத்தி துறைகளுக்கு தமது வாழ்க்கை வட்டத்தை மாற்றியமைத்துள்ளனர் என்பதே உண்மை நிலைமையாகும்.

கடந்த மார்ச் மாதம் 2020 வரை விமானியாக இருந்தவர் இன்று தனது வேலையின்மை காரணமாக, உணவகத்தில் உணவு சமைப்பவராக தம்மை மாற்றிக் கொள்ளுக் அளவுக்கு நிலைமை மாறியிருக்கின்றது. அதே போல் சுற்றுலா வழிகாட்டியாக இருந்தவர் பலர் தமது வாழ்வாதாரத்திற்காக கடல் உணவு விற்பவர்களாக வீடு வீடாக சென்று பொருள்கள் விற்பவர்களாகவும் காலத்திற்கேற்ப தம்மை மாற்றியமைத்திருக்கின்றார்கள்.

பலரது வாழ்க்கை ஓட்டத்திலும் 2020 ஆம் ஆண்டு பல்வேறு வகையான ராட்டின சுழற்சி மாற்றங்களை விட்டுச் செல்கின்றது.

பலரும் தமது வேறு மார்க்கமின்றி தமது சக்திக்கேற்ற வகையில் தமது வாழ்க்கைப் பயண திசையை மாற்றி ஓடிக் கொண்டிருக்கின்றார்கள் - 2021 ஆம் ஆண்டு மேலும் சில பல மாற்றங்களை கொண்டு வரும் என்ற நம்பிக்கையோடு.

ஆனால் மாற்றங்கள் வந்து, விடிவு பிறக்காவிட்டால் கொரோனாவுக்குப் பலியான துறைகளில் முன்னணி இடம் சுற்றுலாத் துறைக்கு என்பது வரலாற்றுப் பதிவாகும்.



# புரட்டிப் போட்டுவிட்டு போகின்றது 2020





- ப்ரியமதா பயஸ் -

உலகத்தில் விஞ்ஞானத்தின் உச்சக்கட்ட வளர்ச்சி, மனிதனை யாரும் ஆட்டிப் படைக்க முடியாது என்று மனிதன் கொண்ட கர்வம், உலகப் பந்தை ஆள்வது மனித சமூகமே என்ற திமிர், அண்டவெளியெங்கும் நாமே ஆள்வோம் என்ற பெரும் எதிர்பார்ப்பு, அத்தனை கோள்களையும் நம் கைக்குள் அடக்கு வோம் என்று மனிதன் கண்ட கனவு எல்லாவற் றையும் அடங்க வைத்து, இன்று பூகோள சாஸ்திரங்க ளையும், சனிப் பெயர்ச்சியையும் முன்னோர்கள் கணித்த எதிர்வுகூறல்கள் எல்லாவற்றையும் புரட்டி புரட்டி பார்க்க வைத்த ஆண்டாக 2020 மாறியது - மனித குல வரலாற்றில் யாராலும் மறக்க முடியாத ஆண்டாகி விட்டு எந்த சலனமும் இன்றி புறப்பட்டு போகப்போகிறது 2020 ஆம் ஆண்டு .



மனித நடமாட்டம் இல்லாத வீதிகள், மாணவர்கள் இல்லாத பாடசாலைகள், பக்தர்கள் இல்லாத கோயில் கள், கறல்கட்டும் பூட்டுக்களை தாங்கி நிற்கும் தொழிற் கூடங்கள், தூசு நிறைந்த கதிரைகளை கொண்ட திரை யரங்குகள் என இதுவரை நாம் கேள்விப்படாதவை எல்லாம் கண்டோம் இந்த ஆண்டில்.

இதனால் ஏற்பட்ட பாதிப்புகள், நாம் இழந்தவைகள் எல்லாவற்றையும் 2020 ஆம் ஆண்டு அடுத்த 2021 ஆம் ஆண்டிடம் கையளித்து விட்டுப்போகிறது. இன் னும் மிஞ்சிய கொரோனா கிருமிகள் என நாம் அனுப வித்தமை கொஞ்ச நஞ்சமல்ல.

உள்ளூர் பேருந்துப் போக்குவரத்து முதல் சர்வதேச விமானங்கள் வரை அனைத்துப் போக்குவரத்துகளும் ஸ்தம்பித்து விட்டன. வாகனங்களே இல்லாத வீதிக ளையும் கட்டடங்களையும் பார்ப்பதற்காகவே பொது மக்கள் பொது முடக்கத் தளர்வின்போது வீதிகளை நோக்கி படையெடுத்தனர் அதற்குள் நடந்த தள்ளுமுள் ளில் கொரோனாவுக்கு இரையாகிப்போனவர்கள் எத்தனை ஆயிரம்பேர்...?

பரீட்சைகள் இல்லாமல், படிப்புகள் இல்லாமல், வகுப்புகள் நடக்காமல் அடுத்த வகுப்புக்குச் செல்லும் மாணவர்கள் - ஜூம், இணையம், வாட்ஸ் - அப் , வைபர் என கற்றல் முறையில் வந்த மாற்றமும் நகர்வு - சமூகத்தில் உயர்ந்த நிலையில் இருந்த பலரும் உயிரிழந்த சோகம் எத்தனை எத்தனை.- அம்மாவுக்கு, அப்பாவுக்கு, இரத்த உறவு களுக்கு கொள்ளி போடாமல் கொள்ளிக்குடம் உடைக் காமல் நடந்த சாவீடுகள் - பல மனித உயிர்கள் மாண்ட போதும் இறுதி நிகழ்வுகளைக் காணாத ஊர்ச் சுடலை கள் - பல்கலைக்கழக கல் பெஞ்சுகள் எல்லாம் காக்கை களும் குருவிகளும் கூடிக்கழித்து எச்சமிட்டு போகும் கற்சுவர்களாக மட்டும் இருக்கின்றன .

இதுவரை சேமிப்பைப் பற்றியே கவலைப்படாத வர்கள், சேமிப்பு ஒன்றுதான் தங்கள் எதிர்காலத்தைக் காக்கும் என்பதை உணரத் தொடங்கி விட்டனர். தேவையில்லாமல் பொது இடங்களுக்குச் சென்று வெட் டியாகப் பொழுது போக்கிக் கொண்டிருந்த பலரும் இப் போது பொது இடங்களில் கூடுவதற்குப் பயப்படுகின்றனர்.

கொரோனா காலத்தில் 'வீட்டிலிருந்தே வேலை' தத்துவம் அலுவலகக் கதிரைகளுக்கும் முதலாளிகளுக் கும் ஒரு செக் வைத்தது என்பது மறுக்கமுடியாத உண்மை .புதிய உடைகளை நாடாத பண்டிகைகள், புதிய புதிய தொடர்புகளை விரும்பாத வாழ்க்கை என எத்தனை எத்தனை....?

எல்லாவற்றையும் ஒரேயடியாகப் புரட்டிப் போட்டு விட்டுப் போகிறது 2020.

இத்தனையும் மாறி அடுத்த ஆண்டு ஒரு புதுப் பொலிவை எமக்குத்தர எல்லாம் வல்ல இயற்கையிடம் வேண்டுவோம் .

# அரை நூற்றாண்டாய் ஒளிர்ந்த

## பாடும் நிலாவை பறித்த 2020..!!



என்.குமரன்



பிறக்கின்ற ஒவ்வொரு வருடங்களையும் மகிழ்ச்சி யுடன் வரவேற்கின்ற வழமையுடன் 2019 ஆம் ஆண்டு வருட இறுதியில் மகிழ்ச்சி பொங்க 2020ஆம் ஆண் டினை வரவேற்ற எங்களுக்கு அதே போல 2021 ஆம் ஆண்டினை வரவேற்க ஏனோ மனம் மறுக்கின்றது. காரணம், 2020 ஆம் ஆண்டு எம்மவர் மத்தியில் காட்டிய 'அதீத' அன்பு.

அப்படி என்ன 2020 எங்கள் மீது அன்பினை வாரி வழங்கிவிட்டது? மாறாக, அழிவுகளைத்தானே ஏற்படுத் தியுள்ளது என்று நினைக்கின்ற பலருக்கும் நான் கூறு வது, வருடம் ஆரம்பித்து சொற்ப காலத்திலிருந்தே தொடர்ச்சியாக ஒவ்வொரு சோதனைகளையும் இடை விடாது வழங்கிக்கொண்டிருக்கின்றது என்றால் எம் மீது கொண்டுள்ள 'அதீத' அன்பின் காரணமாகத் தானே..?

எங்களுக்கு மட்டுமல்ல, ஒட்டு மொத்த உலகிற்குமே இந்த ஆண்டு எதற்காக என்று கேட்குமளவுக்கு வேண் டாத பலவற்றை தேவைக்கு அதிகமாகவே கொடுத்து விட்டு எமக்கு வேண்டும் என நினைத்த பலவற் றையும் எங்களிடம் இருந்து பறித்துவிட்டது.

அந்த வகையில் தான் தமிழ்த் திரையுலகில் பல்வேறு பிரபலங்களின் உயிர்கள் அடுத்தடுத்து பிரிந்தமையினால் இன்றுவரை திரையுலகே சோகத்தில் மூழ்கியிருக்கின்றது. டி.எஸ். இராக வேந்திரா, விசு, சேதுராமன், பரவை முனியம்மா, வடிவேல் பாலாஜி, ஃப்ளோரன்ட்பெரேரா, பாபு சிவன், ஜெயபிரகாஸ் ரெட்டி, விஜே சித்ரா என இயக்குனர்கள், பாடகர்கள், நடிகர்கள், நகைச் சுவை நடிகர்கள் என்று பலியெடுத்தஇந்த ஆண் டின் மறக்கமுடியாத மறைவாக இருந்ததுதான் பாடகரும் இசையமைப்பாளருமான எஸ்.பி.பால சுப்ரமணியம் அவர்களது மறைவு.

பாடும் நிலா.. என்று ரசிகர்களால் உச்சரிக்கப்பட்டு வந்த எஸ்.பி.பாலசுப்ரமணியம் செப்ரெம்பர் மாதம் 25 ஆம் திகதி கொரோனா நோயினால் பாதிக்கப்பட்டு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த நிலையில் காலமாகினார். ரீபதி பண்டிதாரத்யுல பாலசுப்ரமணியம் என்கின்ற பெயரைக்கொண்டு 1946 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 04 ஆம் திகதி சென்னையின் நெல்லூர் பகுதி யில் பிறந்தவர் பாலசுப்ரமணியம். 1960ஆம் ஆண்டின் பிற்பகுதியில் தமிழ்த் திரையுலகில் அத்தானோடு இப்படி யிருந்து எத்தனை நாளாச்சு என்ற பாடல் மூலம் இசைப் பயணத்தை ஆரம்பித்து அரை நூற்றாண்டுகளாக அழியாப் புகழ் பெற்று தமிழ்த் திரையிசைப் பாடகர்களின் வரிசையிலே இன்று வரையில் முன்னணியில் இருந்து வந்தவர்.

நாற்பதாயிரத்துக்கும் அதிகமான பாடல்களைப் பாடி கின்னஸ் சாதனை படைத்தது மட்டுமன்றி, தேசிய விருதினை நான்கு மொழிகளுக்கு பெற்றுக்கொண்ட ஒரேயொரு திரைப்படப் பின்னணிப் பாடகராக இருந்த வர். அத்துடன் ஆந்திர அரசினால் வழங்கப்படும. நந்தி விருதினை 25 தடவைகள் பெற்ற பெருமைக்கும் உரிய வர். அத்தனை சாதனைகளுக்கும் சொந்தக்காரராக இருந்து கடந்த ஓகஸ்ட் மாதம் கொரோனாத் தொற்றுக்கு இலக்காகி போராடிவந்து குணமடைந்து விட்டார் எனத் தனது ரசிகர்களை ஆசுவாசப்படுத்தி வந்த நிலையில் திடீரென இந்த உலகைவிட்டு, தனது கோடானகோடி ரசிகர்களை விட்டு, மறைந்து போனார் பாடும் நிலா..

ஒரு பாடகராக கர்நாடக சங்கீத இசையை முறையாக அவர் பயிலவில்லை என்றாலும் சங்கராபரணம் என் கின்ற திரைப்படத்தில் கர்நாடக இசையில. உருவாகிய பாடலை துல்லியமாகப் பாடி தேசிய விருதையே தன தாக்கி கொண்டவர். இசைஞானி இளையராஜாவின்ஆஸ் தான பாடகராகத் திகழ்ந்தவர். ஒரே பாடலிலேயே சோகம், மகிழ்ச்சி கலந்து இசைக்கவும், அழுகையிலே பாடலை ஆரம்பித்து துள்ளலோடு பாடலை முடிக்கவும், துள்ளலோடு ஆரம்பித்து முடிவில் பாடலை சோகத்துடன் இழையோட வைக்குமளவிற்கு வேறெந்த பாடகர்களுக் கும் இல்லாத தனித்தன்மை அல்லது சிறப்பியல்பு கொண்டு ரசிகர்களைத் தன்னகத்தே கவர்ந்திழுத்து வைத்திருந்தவர் எஸ்.பி.பி.

இத்தகைய அழியாப் புகழ் கொண்டு எம்மத்தியில் வாழ்ந்து எங்களை மகிழ்வித்துக் கொண்டிருந்த, தனது திறமையினால் மிளிர்ந்துகொண்டிருந்த, பாடும் நிலா வினை இந்த 2020 ஆம் ஆண்டுக்கு என்றே கடந்த 2019 இறுதியில் உருவாக்கி அனுப்பி வைக்கப்பட்ட கொடிய கொள்ளை நோயான கொரோனா கொண்டு போனது. இந்த ஆண்டிலிருந்து விடைபெறுகின்ற எம்ம வர்களால் என்றுமே ஈடுசெய்ய முடியாத பேரிழப்புகளில் இதுவும் ஒன்று..!!

# சென்று வா இருபதே ...

இருள்கள் அகற்றி
இன்பங்கள் பெருக்கி
இழந்துபோன இதயங்களுக்கு
இன்னிசை பொழிவாயென்று
இறைஞ்சிக் காத்திருக்க
இடைவெளிகளை தந்துசென்ற
இருபதுக்கு இருபதே - சென்றுவா.....

றோமாபுரி எரிய
பிடில் வாசித்த
சீனா மன்னரையும்...
அதிகளவு உயிர்களை
அநியாயமாய் அனுப்பி வைத்த
அமெரிக்க மன்னரையும்...
உலக அரங்கதனில்
அதிர வைத்தாய் - சென்றுவா....

கானாவூர் திருமணத்தில்
கர்த்தர் காட்டிய
முதல் புதுமை
சீனா நாட்டில்
அரங்கேறாது
நிம்மதி பீனிக்ஸை
சாம்பலில் புதைத்த
இருபதுக்கு இருபதே - சென்றுவா...

சீனப்பெருஞ்சுவரின்
கின்னஸ் சாதனையை
கொரோனா பெருந்துயராய்
கொட்டிச் சென்ற ஆண்டே
சகடையில் செத்திருக்கலாம் இல்லை
சஹ்ரானால் செத்திருக்கலாம்
சனிற்ரைசரால் சாகிறோம்
சந்தோஷமாக - சென்றுவா...

மானிடருக்கு மாஸ் போட்ட
மனிதாபிமானமில்லா ஆண்டே
விமானங்களை உறங்க வைத்த
விசனமிகு ஆண்டே
பள்ளிகளுக்கு பற்லொக் போட்ட
பரிசிகெட்ட ஆண்டே
பார்க்க விரும்பவில்லை - சென்றுவா...

திருமணத்தை நிறுத்தினாய்
திவசத்தை நிறுத்தினாய்
சாமத்திய வீட்டை
சாமானியமாய் நிறுத்தினாய்
நாகவிகாரையை நிறுத்தினாய்
நல்லூரை நிறுத்தினாய்
நத்தாரை நாசூக்காய்
நடுநிசியில் நிறுத்தினாய் - சென்றுவா .....

சரிந்த நாங்கள்
எழுந்து நடந்தோம்
சரிதான் போகட்டும் என்று
சமாளிக்க நினைத்தோம்
சாணால் ஏறினோம்
முழத்தால் சறுக்கினோம்
ஸ்ரான்லி றோட்டை
வெள்ளத்துக்குள் தேடினோம் - சென்றுவா...

ஏதேன் தோட்டத்து அப்பிளாய்
இனியும் பிறக்காதே...
கோட்சேயின் துப்பாக்கிச் சன்னமாய்
இனியும் பிறக்காதே....
கிரோஷிமாவின் அணுகுண்டாய்
இனியும் பிறக்காதே ...
புறூட்டஸ்ஸின் கத்தியாய்
இனியும் பிறக்காதே - சென்று வா...

மன்னித்து விடுகிறோம்
யேசுவாய் மாறி...
மறந்து விடுகிறோம்
புத்தனாய் மாறி...
மனம் வருந்துகிறோம்
அல்லாவாய் மாறி... ஆனால்
அடுத்த ஆண்டிலும்
கைகழுவ விட்டுவிடாதே... சென்றுவா...

# மன்னிக்கப் பிறப்பாய் ....

கே.எஸ்.சிவஞானராஜா

செய்த தவம் பொய்த்தது என்று சொல்லியே
செய்வது அறியாது இருபதே சென்று விட்டாய்!
மெய்யாகவே அதுவென்றால் மன்னித்து விடுவாய்!
மீண்டும் தவமாவோம் பிறப்பாய் இருபத்தொன்றாய்!

கோயிலைக் கட்டினோம் கோபுரம் செய்தோம்
கோடியைக் கொட்டினோம் கும்பாபிசேகம் செய்தோம்
கொட்டிச் சிந்தி அன்னதானமும் செய்தோம் நீயோ
கொரோனாவை ஒழித்துக்கட்ட மருந்தோடு பிறப்பாய்!


ஆணவமே நாமாகி அத்தனையும் செய்து கொண்டோம்
ஆலயங்களில் கும்பிடாமல் அவமாக்கிக் கழித்து விட்டோம்
பேணவும் பேறாக்கவும் தெரியாமல் போலிகளாகி விட்டோம்
பெறுமதியாக்கிடப் பிறந்து வா பேருக்கும் புகழுக்கும் வராதே!

நாடோ போதையாகி விட்டது நாளும் விபத்தாகி விட்டது
காடோ அழிந்து விட்டது பறவைகளோ இறைச்சியாகி விட்டது
வீடோ மாபிளாகி விட்டது வெளிக்கிட்டால் விதியே வீதியாகிறது
ஈடோ அறுதியாகிவிட்டது இதையறிந்து
எமக்குதவப் பிறந்து வா!

வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் இனிய புத்தாண்டு வாழ்த்துக்கள்...!
HIKVISION Mega Store
No 1 Worldwide CCTV and Video Surveillance
கிக் விஷன் மெகா ஸ்ரோர்
வடமாகாண பிரதான நிறுவுநர் மற்றும் காட்சியாளர்
(Main Show Room in Northern Province)

உங்கள் வீடுகள், அலுவலகங்கள், வங்கிகள், கோயில்கள் மற்றும் பொதுப் பராமரிப்பு நிலையங்களின் பாதுகாப்பினை சிறந்த முறையில் கண்காணிப்பை உறுதி செய்வதற்கு, குறித்த தவணையில் நம்பகத் தரமான முதற் தர சீ.சீ.ரிவி கமராக்கள் பொருத்தித்தரப்படும்.
நம்பகத் தரமான முதற் தர சீ.சீ.ரிவி கமராக்கள் மற்றும் உதிரிப்பாகங்களை இங்கு பெற்றுக் கொள்ளலாம்
HIKVISION

Hot Line -021 222 7126
077 473 6057
077 2871 841
077 899 2923
hikvisionmegastore@gmail.com
இல - 164, பலாலி வீதி,
திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்.
164, Palaly Road,
Thirunelvely, Jaffna



# கடந்து செல்வதோ ருவென்டி – ருவென்டி’; ஆனால் வெற்றியோ கொவிட் 19 இற்கு...!

**சு.சாரலன்**

2020 ஆம் ஆண்டு இன்றுடன் முடிவடைகின்றது. இவ்வாண்டு பிறந்தது முதல் முடியும் வரை நமது வாழ்க்கையில் ஏற்படுத்திய மாற்றம் என்ன என்ற கேள்விக்கான பதில் பலருடைய வாழ்க்கையில் தமது வயதுடன் ஒரு வயது கூடியது என்பதேயாகும்.

உலக நாடுகளிலும் சரி, நாம் வாழும் இலங்கையிலும் சரி இதற்கான காரணம் இப்போது வரை எம்மை ஆட்டிப் படைத்துக் கொண்டிருக்கும் கொவிட் என்ற கொடூர அரக்கனேயாகும்.

இந்த ஆண்டினை அந்நோய் தனது ஆட்டத்துக்கான ஆண்டாகவே கொண்டது. உண்மையிலேயே இவ்வாண்டு கொவிட் நோய்க்கே ருவென்டி ருவென்டி. என்ன சுப்பர் ஓவர் (super over) என்றே சொல்லலாம். ஆனால் மக்களின் வாழ்க்கையில்தான் டெஸ்டிலும் கேவலமான ஆண்டு என்று கூறலாம்.

இந்த ஆண்டிலே தான் கொவிட் தனது பிறந்த நாளை மிக விமர்சையாக கொண்டாடியது. இந்த ஆண்டில் கொவிட் என்ற துடுப்பாட்ட வீரனால் பல மைதானங்களில் (நாடுகளில்) அடிக்கப்பட்ட ஓட்ட எண்ணிக்கையைப் பார்த்தால் (மக்கள்) கோடிக்கணக்கான அதில் எல்லைக் கோட்டிற்கு வெளியே சென்ற பந்துகள்(இறப்புகள்) பல்லாயிரம். கொவிட் எனும் அதிரடி நாயகன் தனது அதிரடி ஆட்டத்தை அந்த மாதிரி வெளிப்படுத்தியுள்ளான்.

பொருளாதார வீழ்ச்சியைப் பார்த்தால் உலக வல்லரசு நாடுகளில் இருந்து அனைத்து நாடுகளின் பொருளாதாரமும் படு மோசமான வீழ்ச்சிதான். அத்தனையையும் ஒன்று திரட்டிக் கொண்டது கொவிட் –19.

இனி இந்த ஆண்டில் இலங்கையில் இக் கொவிட் நோயினால் நடந்தது என்ன என்பதைப் பார்க்கலாம். இவ்வருடத் தொடக்கத்தில் – மார்ச் மாதம் நடுப்பகுதியில் நாட்டில் பூரண ஊரடங்கு உத்தரவிடப்பட்டது. அது ஏப்ரல் மாதம் வரை நீடித்திருந்தது. அக்காலத்தில் அனைத்து மக்களும் வீடுகளில் இருந்து வெளியே வர முடியாமல் தவித்தார்கள். காலம் காலமாக வெளியே உலாவித் திரிந்த மக்களுக்கு உள்ளே இருப்பது என்பது மிகவும் கஷ்டமான காரியமாகவே இருந்தது. என்ன செய்வது வேறு வழி...?

பலரின் விடுமுறை மிக Boring ஆகவே சென்றது. சிலர் அதனை பயனுள்ளதாக்கினர். ஊரடங்கு முடிந்த பின் ஒவ்வொருவரும் “மாஸ்க்” அணிய வேண்டிய நிலையே இருந்தது; இருக்கின்றது. அக்காலத்தில் இலங்கை வாழ் மக்களுக்கு கொவிட் என்பது புதிதாகவே இருந்தது. பின்னர் அது பற்றிய புரிதல்கள் வரவர கொரோனாவுடன் இணைந்து வாழவேண்டிய நிலையே ஏற்பட்டது. வேறு வழியும் அற்றுப்போனது.

இக் காலத்தில் பல்வேறு துறை சார்ந்தவர்களது பணிகள் வீழ்ச்சியே அடைந்தன. அதில் மாணவர்களின் நிலைமை மிகவும் மோசமானது. காரணம் இன்று வரை பாடசாலை நடந்த நாள்கள் மிகச் சொற்பமே. இவ்வாண்டுக்கான புலமைப்பரிசில், கா.பொ.சா., கா.பொ.உ. அனைத்திலும் இடிதான். புலமைப் பரிசில் காலதாமதமாகவே நடந்தது.

அனால், பெறுபேறுகள் மிக விரைவாகவே வெளியிடப்பட்டன. அதில் மாணவர்கள் வரலாறு காணாத சாதனைகளை படைத்திருந்தார்கள் என்பது யாவரும் அறிந்ததே. இக் காலதாமதம்தான் மாணவர்கள் இவ்வாறு அதிகப் படியான பெறுபேறினை பெற வைத்தது என்பது சற்று யோசிக்க வேண்டிய விடயம்தான். இதனால் தொடர்ந்தும் புலமைப்பரிசில் ஐப்பசி மாதம் நடைபெறுமா?

இதில் மாணவர்களின் கற்றல் எவ்வாறு நடைபெற்றது. ஆசிரியர்களும் தம்மால் இயன்ற வரை இணையக் கல்வியால் (Zoom) மூலம் கல்வி நடவடிக்கைகள் நடத்தப்பட்டன. அது மாணவர்கள் இடையே எத்தனை சதவீதம் போய்ச் சேர்ந்தது என்பது கேள்விக்குறியே. அதில் வறிய மாணவர்களிடம் இவ் இணைய வழி கிடையாது என்பது மிகவும் வருத்தப்பட வேண்டிய நிலைமை ஆகும். இவ்வாறுதான் ஒவ்வொரு துறையிலும் மிகப் பெரும் வீழ்ச்சியே எதிரொள்ளப்பட்டுள்ளது.

அத்தோடு அன்றாடம் உழைத்து உண்பவர்களின் ஈடுபடுவோரின் நிலையும் மிகவும் கொடூரமாக இருந்தது. அவர்களுக்கான உழைப்பில்லை. அதனால் தமது வாழ்வாதாரத்தை கொண்டு செல்ல பெரும் பாடுபட்டார்கள். இவ்வாறு ஏற்றத் தாழ்வு இன்றி கொவிட் அனைவரையும் ஆட்டிப் படைத்துள்ளது.

இந்த ஆண்டு முடிவடைகின்றது. பிறக்கவிருக்கும் அடுத்த ஆண்டானது கொரோனா



என்ற கொடூர அரக்கனில் இருந்து நாம் விடுபடுவதற்கான காலம் அருகி வந்துள்ளது என்பதை நம்புவது போல் தடுப்பூசி கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

ஆனால் அத்தடுப்பூசி எந்த வகையில் அதலிருந்து விடுபடுவதற்கான வாய்ப்பை ஏற்படுத்தப் போகின்றது என்பது சந்தேகத்துடன் காணப்பட்டாலும் அனைத்து மக்களும் முழு நம்பிக்கையுடன் கொரோனாவை அழிப்பதற்கான நடவடிக்கையில் ஒத்துழைப்புடன் ஈடுபடுவோம் என்பதை மனதில் நிறுத்தி ருவென்ரி – ருவென்ரிக்கு Good Bye சொல்லி அடுத்த வருடமானது மக்களுக்கான டெஸ்ட் போல் இல்லாமல் அமைய எல்லாம் வல்ல இறைவனைப்பிரார்த்தித்து கொண்டு அனைவருக்கும் மிகச் சிறப்பாக அமைய வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறோம்.

---

**களப்பிரன்**

# மனிதர்கள் நாம் வீறுகொண்டெழுவோம்!

இந்தப் பூமியில் வாழும் பெரும்பான்மையானவர்கள் இதுபோன்றதொரு வருடத்தை இதற்கு முன்னர் பார்த்ததில்லை. கொள்ளை நோய் தாக்கியதில் எப்போது எவ்வளவோ பேர் உயிரிழந்திருக்கிறார்கள் என்று மூத்தவர்கள் சொல்லக் கேட்டதுண்டு. ஆனால், பார்த்ததில்லை. கடந்த 50 வருடங்களில் இதுபோன்றதொரு அச்சத்தை, முடக்கத்தை, நாடுகளின் திறந்த கதவுகள் மூடப்படும் வித்தையை உலகம் கண்டதில்லை. குறிப்பாக இரண்டாம் உலகப் போருக்குப் பின்னர் இதுபோன்றதொன்றைப் பார்த்ததில்லை.



2020 ஞாபகத்தில் விட்டுச் செல்வதற்கு இன்னும் நிறைய இதுபோன்ற “இதற்கு முன்னர் பார்த்ததில்லைகள்” இருக்கின்றன. இதுபோன்றதொரு சித்திரை வருடப் பிறப்பைப் பார்த்ததில்லை, மாடி ஏறிய சந்தைகள் கீழறங்கி சந்திக்கும் வீதிக்கும் இறங்கி வந்ததைப் பார்த்ததில்லை, வெளியே எங்கேயும் போகாமல் வீட்டுக்குள்ளேயே ஒருவரை ஒருவர் பார்த்துக்கொண்டு வாழ்ந்ததை இதற்கு முன்னர் எப்போதும் பார்த்ததில்லை, வேறு நாடுகளுக்குப் போகமுடியாது என்று சொல்லிக்கூடக் கேட்டதில்லை, அரச வேலையில் உள்ளவர்கள் விடுமுறையும் இல்லாமல் வேலைக்கும் போகாமல் சம்பளம் பெற்றதைக் கேள்விப்பட்டதேயில்லை. இப்படி இன்னும் பலப்பல. கவசங்களும் தடைகளும் பாதுகாப்புமாக நடந்த ஒரு பொதுத் தேர்தலைக்கூட இதற்கு முன்னர் பார்த்ததில்லை.

50 வருடங்களில் இல்லாத, நாம் பெற்றிராத, அல்லது திரும்பிப் பார்ப்பதற்கு மறந்துவிட்ட எல்லாவற்றையும் எமக்குக் காட்டிய, சுயபுத்தியைத் தீட்டிய, அபிவிருத்தி முன்னேற்றம் என்கிற ரீதியில் மனிதன் நிகழ்த்தும் கட்டுக்கடங்காத ஓட்டத்தை மறுபார்வைக்குட்படுத்த வைத்த, மனிதன் தன்னையும் தான் வாழும் சூழலையும் உணர வைத்த ஆண்டாக 2020 கடந்து செல்கின்றது. அப்படிப்பட்ட ஒரு ஆண்டை, மனிதனைப் புடம்போடவைத்து சில நாள்களேனும் அல்லது மாதங்களேனும் தன்னை மீள்பார்வை செய்துகொள்ளத் தூண்டிய ஓர் ஆண்டை எப்படி மோசமான ஆண்டு என்று சொல்ல முடியும்.

கொரோனா பெருந்தொற்று ஒன்றே 2020ஆம் ஆண்டை மிக மோசமான ஆண்டாக வர்ணிப்பதற்கான காரணம். கொவிட் – 19 வைரஸ் இதுவரையில் 8 கோடி 25 லட்சம் பேர் வரையிலானோருக்கு தொற்றியுள்ளது. அவர்களில் 18 லட்சம் பேர் உயிரிழந்திருக்கிறார்கள். தொற்று ஏற்பட்டவர்களில் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை என்பது 3 சதவீதத்திற்கும் குறைவானது.

2017ஆம் ஆண்டு 5 கோடி 60 லட்சம் பேர் உயிரிழந்திருக்கின்றனர். தொற்றா நோய்கள், தொற்று நோய்கள், தீவிரவாதம், இயற்கைப் பேரிடர்கள், போசாக்குக் குறைபாடு, போதைப் பொருள் பயன்பாடு என்று எல்லாவகைகளிலும் இத்தனை பேர் உயிரிழந்திருக்கிறார்கள் என்கிறது தரவுகளில் எமது உலகம் (அவர் வேல்ட் இன் டேட்டா) என்கிற அமைப்பு. இவர்களில் கிட்டத்தட்ட அரைவாசிப் பேர் (49 சதவீதம்) 70 வயதுக்கும் மேற்பட்டவர்கள். ஒரு வயதுக்கும் 14 வயதிற்கும் இடைப்பட்டவர்கள் ஒரு சதவீதம் பேர் மட்டுமே. ஆனால் 10 சதவீதமானவர்கள் 5 வயதிற்குக் கீழ்ப்பட்டவர்கள்.

இவற்றிலேயே பெரிய கொலையாளி இதய நோய்கள்தான். ஒரு கோடியே 70 லட்சம் பேரின் உயிர்களைக் காவு வாங்கியிருக்கிறது இந்த நோய். இதில் 85 சதவீதமான இறப்புக்கள் கார்ட் அட்டாக் மற்றும் ஸ்ரோக் நோய்களினால் நிகழ்ந்திருக்கின்றது என்கிறது உலக சுகாதார நிறுவனம். அதிலும் முக்கால்வாசி உயிரிழப்புக்கள் குறைந்த வருமானம் பெறும் நாடுகளில் நிகழ்ந்துள்ளன என்றும் அது குறிப்பிடுகின்றது.

இதே 2017ஆம் ஆண்டில் புற்றுநோயால் இறந்தவர்களின் எண்ணிக்கை மட்டும் 95 லட்சம். ஒவ்வொரு ஆண்டும் வீதி விபத்துக்களின் மூலம் 10 லட்சம் பேர் உயிரிழந்து வருகின்றார்கள்.

இவற்றையெல்லாம் பார்க்கும்போது கொரோனா பெருந்தொற்றால் ஏற்பட்டிருக்கும் உயிரிழப்புக்கள் ஒப்பீட்டளவில் குறைவானதுதான் என்கிற வாதம் ஒன்று ஒரு பகுதி மருத்துவ வட்டாரங்களில் உண்டு. அது சரியானதா தவறானதா என்பதற்கப்பால் கொரோனாவை வைத்து 2020ஆம் ஆண்டை மோசமான ஆண்டாக வகைப்படுத்துவது சரியானதா என்கிற கேள்வியை எழுப்புவதற்கு இந்தப் புள்ளிவிவரங்கள் உதவக்கூடும்.

இதைச் சொல்வதற்கு ஒரு காரணம் உண்டு. உயிரிழப்புக்கள் எப்போதுமே நிகழ்ந்துகொண்டுதான் இருக்கின்றன. அது தவிர்க்க முடியாதது. கொரோனாவால் நிகழந்த உயிரிழப்புக்களையும் அதுபோன்றே நாம் கடந்து சென்றாகவேண்டும். துன்பியலாக, கொரோனாவால் உயிரிழப்புக்கள் மட்டும் நிகழவில்லை பொருளாதாரப் பேரிழப்புக்களும் நிகழ்ந்துள்ளன. அதேநேரம் அதனை ஈடுசெய்யும் வகையில் சுற்றுச்சூழல் மீளுருவாக்கமும் நடந்திருக்கிறது. எனவே மனித குலத்திற்கு ஒரு பாடத்தைப் போதித்ததன் ஊடாக மனிதனுக்கு நல்ல புத்தியைக் கொடுத்திருக்கிறது 2020. அதைப் புரிந்துகொண்டு இயற்கையோடு இணைந்ததான எதிர்காலத்தைக் கட்டியெழுப்ப மனிதர்கள் முன்வர வேண்டும். அந்தப் போதையைக் கொடுத்ததற்காக 2020க்கு நன்றி சொல்லியாகவேண்டும்.

தறிகெட்டு ஓடிய மனித குலத்தை நின்று நிதானித்து திரும்பிப் பார்க்க வைத்து தன்னை உணரவைத்த 2020 ஆண்டு போய் வா! மனிதர்கள் நாம் மீண்டும் நிமிர்வோம், வீறு கொண்ட நடையுடன்.




# தமிழர்களுக்கு ஏமாற்றம் தந்து நம்மை விட்டுப் பிரிகிறது

ந.லோகதயாளன்

இன்றுடன் கழியும் 2020ஆம் ஆண்டு அரசதலைவர்கள், அமைச்சர்களினால் வழங்கப்பட்ட வாக்குறுதிகள் நிறைவேற்றப்படாது மக்கள் அதிகம் ஏமாற்றப்பட்ட




ஆண்டாகவே போகிறது. இதில் அதிகம் வஞ்சிக்கப்பட்டு ஏமாற்றப்பட்டவர்கள் தமிழ் மக்களாகவே காணப்படுகின்றனர்.

கிழக்கு மாகாண தொல்லியல் திணைக்களத்தின் செயலணி தனிச் சிங்களச் செயலணியாக நியமிக்கப்பட்டதனைச் சுட்டிக்காட்டியபோது தமிழர் ஒருவர் நியமிக்கப்படுவார் என ஒரு வெற்று வாக்குறுதியளிக்கப்பட்டது. இருப்பினும் அது ஆண்டு இறுதி வரை இடம்பெறவில்லை. ஏனெனில் தகுதியான தமிழர் இல்லையாம். ஆனால் நியமிக்கப்பட்ட சிங்களவர்கள் அனைவரும் தகுதியானவர்களாம்.

யாழ்ப்பாணக் குடாநாட்டில் 2020 ஆம் ஆண்டு மே மாதம் வீசிய அம்பன் புயலால் பாதிக்கப்பட்ட விவசாயிகளிற்கு 51.6 மில்லியன் ரூபா இழப்பீடு வழங்கப்படும், அமைச்சரவை அனுமதி கிடைத்தது என்றனர். 2021 ஆம் ஆண்டு மே மாதமாவது இழப்பீடு கிடைக்குமா என்கின்றனர் விவசாயிகள்.

2020 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 19 ஆம் திகதி பூட்டப்பட்ட யாழ்ப்பாணம் சர்வதேச விமான நிலையம் இதோ டிசம்பர் 26ஆம் திகதி திறக்கப்படுகின்றது என வாய்ச் சவடால் விட்டனர். அப்போதே கூறினோம், டிசம்பர் 26ஆம் திகதி திறக்கப்படவே மாட்டாது என. அதுவே நிஜ மாகியது. தற்போது ஜனவரி 26ஆம் திகதியேனும் திறக்குமா என தமிழ் மக்கள் கேள்வி எழுப்புகின்றனர். ஆனால் பதிலளிப்பதற்குத்தான் யாரும் இல்லை.

அரிசி, சீனி, ரின்மீன், தேங்காய், வெங்காயம் உள்ளிட்ட பொருள்களிற்கு அரச வர்த்தமானி அறிவித்தல் மூலம் விலை குறைக்கப்பட்டது. அந்த விலையை பத்திரிகைகளிலேயே ஏழை மக்கள் பார்த்தனர். நிஜத்தில் காண முடியவில்லை. இந்த லட்சணத்தில் விற்கப்படும் தேங்காயின் அளவை நிர்ணயித்து, வர்த்தகர்களை மடக்க கம்பி வலயம் வேறு தயாரித்தனர்.

அம்பாந்தோட்டை துறைமுகத்தை சீனாவிடம் இருந்து மீட்போம் என்று தேர்தல் காலத்தில் முழங்கிய அரசு தற்போது கொழும்பு துறைமுகத்திலும் ஒரு பகுதியை இழக்கப் போகின்றது. இது தலைப்பாகை எடுக்க முயற்சித்துக் கொண்டிருக்க கட்டியிருந்த கோவணமும் பறிபோகும் செயலிற்கு ஒப்பானது.

ஜனாதிபதி பதவி ஏற்று ஓர் ஆண்டு நிறைவு பெற்ற போதும் வடக்கு, கிழக்கு மாகாணத்தை அவர் எட்டியும் பார்க்கவில்லை. இதன் மூலம் வாக்களிக்காத மக்கள் தமக்கு மாற்றான்தாய் பிள்ளை என்பதனை நிரூபிக்கின்றார் அவர்.

200 ரூபாவுக்கு விற்பனையான மஞ்சள் இலங்கையின் வரலாற்றில் 5 ஆயிரம் ரூபாவுக்கு விற்ற ஆண்டாகவும் உழுந்து ஆயிரத்து ஐநூறு ரூபாவாக விற்பனை செய்த ஆண்டாகவும் இது சரித்திரத்தில் பதியப்படுகின்றது.

சிவில் நிர்வாகத்தில் அதிகமாக ஓய்வு பெற்ற இராணுவத் தளபதிகள் நியமிக்கப்பட்ட ஓர் ஆண்டு எனில் அது நம்மைக் கடந்து போகும் 2020 ஆம் ஆண்டாகவே கருத முடியும். ஆனாலும் இவ்விடயத்தில் நாளை பிறக்கப்போகும் ஆண்டு இதை விட மோசமாக இருக்கும் என்று கூறுவதற்கு இல்லை என்பதுதான் நிலைமை.

2020 பெப்ரவரியில் இந்தியாவின் ஹைதரா



பாத்தில் இந்தியப் பிரதமரின் இல்லத்தில் இடம்பெற்ற சந்திப்பின் நிறைவில் வடக்கு மீனவர்களின் பிரச்சினையை உடன் தீர்ப்பேன் என்றார் இலங்கை பிரதமர். இதற்குப் பொருத்தமாக தமிழர் ஒருவரையும் அமைச்சராக நியமித்தும் இன்று வரை எந்த தீர்வும் இல்லை. டிசம்பர் 30 ஆம் திகதி (நேற்று) நேரடிப் பேச்சு என்றனர். இறுதியாக அதிகாரிகள் கணனியில் முகம் பார்த்தமையே மிச்சம். இலங்கையின் இறையாண்மை தொடர்பில் பேசும் அரசு வாய் மூடியுள்ளது. வடக்கு மாகாணத்திற்குள் இந்திய மீனவர்கள் ஊடுருவதை கை கட்டி வேடிக்கை பார்க்கும் அரசு நீர்கொழும்பு அல்லது அம்பாந்தோட்டை கடலிற்குள் ஊடுருவி யிருந்தால் இவ்வாறு வேடிக்கை பார்க்குமா என்ற கேள்வியும் எழுப்பப்படுகின் றது.

2020 ஆம் ஆண்டில் தற்போதைய அரசினால் தேர்தலிற்காக வந்த சப்ரிகமவைத் தவிர எந்த திட்டமும் தற்போதைய அரசின் திட்டம் கிடையாது. அமைச்சர்கள் திறக்கும் அலுவலகங்கள் முதல் ஐ றோட் வரை எத்தனையோ ஆண்டிற்கு முற் பட்டவை. இருப்பினும் ஆளும் அரசு என்ற வகையில் திறப்பு விழாக்கள் மட்டும் அத்தரப்பினால் ஆரவாரமாக அவ்வப்போது இடம் பெற்றன.

இலங்கையில் இருந்து வெளிநாடுகளிற்கு பயணிக் கும் பயணி ஒருவருக்கு விமான நிலைய கட்டணமாக 50 டொலர் அறவிடுகின்றபோதும் யாழ்ப்பாணம் சர்வதேச விமான நிலையம் ஊடாக பயணிக்கும் பயணியிடம் மட்டும் 100 டொலர் அறவிடுவதனாலேயே யாழ்ப்பாணத்தில் இருந்து இந்தியா பயணிக்கும் விமானச் சிட்டை அதிகரித்த பெறுமதியில் உள்ளது. இதனையும் 50 டொலர் அல்லது 3 ஆண்டுகளிற்கு முழுமையான விலக்கு அளிக்குமாறு பல கோரிக்கைகள் முன்வைக்கப்பட்ட நிலையில் யாழ்ப்பாணம் விமான நிலையம் முழுமையாக மூடப்பட்ட அதேநேரம் கட்டுநாயக்கா, மத்தள, இரத்மலானை ஆகிய விமான நிலையங்களிற்கு 2020 - 12 - 26 முதல் முழுமையான வரி விலக்கு அளிக்க அமைச்சரவை அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இந்த அனுமதியின்போது யாழ்ப்பாணம் மறக்கப்பட்டு விட்டது. அந்த மூன்று விமான நிலையங்களிலும் இப்போது பயணிகளுக்கு வரிவிலக்கு. ஆனால் பலாலி விமான நிலையம் தப்பித் தவறி மீண்டும் இயங்க ஆரம்பிக்குமா னால் அங்கு மட்டும் பயணிகள் ஒவ்வொருவரும் தொடர்ந்தும் தலா நூறு டொலர் செலுத்த வேண்டும் என் பதுதான் இப்போதைய நிலைமை.

ஒரு லட்சம் பேருக்கு அரச வேலை வாய்ப்பில் போரால் பாதித்த வடக்கு, கிழக்கிற்கு விசேட சலுகை என்றனர். அதன் பின்பு ஒரு கிராம சேவகர் பிரிவிற்கு தலா 10 நியமனம் என்றனர். வடக்கின் 5 மாவட்டத்தில் இரு பிரதேச செயலாளர் பிரிவில் மட்டுமே அந்த விதி முறை கடைப்பிடிக்கப்படுகின்றது. ஏனெனில் அந்த இரு பிரதேச செயலாளர் பிரிவுகளும் தனியே சிங்கள மக்கள் வாழ்கின்றனர் என்பதனால்.

இதேநேரம் தேர்தல் நோக்கத்திற்காக பணியில் இருந்த அதிகாரிகள் தூக்கி எறி யப்பட்டும் இரவோடு இரவாக இடம் மாற்றப்பட்ட ஆண்டாகவும் இது காணப்பட்டது.

இவ்வாறு மக்கள் வஞ்சிக்கப்பட்ட ஆண்டாக 2020ஆம் ஆண்டு கடந்து செல்கையில் 2021ஆம் ஆண்டு வஞ் சனைகளுக்குத் தீர்வு தரும் ஆண்டாக அமையுமா அல் லது வஞ்சனையின் பட்டியல் நீளுமா என்பதே கேள்விக்குறியாகவுள்ளது.






காலைக்கதிர் Kalaikkathir

# சுயதொழில் வேலைவாய்ப்பு 2 லட்சம் உருவாக்க முயற்சி

## பஸில் ராஜபக்ஷ தெரிவிப்பு



அடுத்த ஆண்டு 2 லட்சத்துக்கு மேற்பட்ட சுயதொழில் வேலைவாய்ப்புகளை உருவாக்குவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதாக பொருளாதார மறுமலர்ச்சிக்கான ஜனாதிபதி செயலணியின் தலைவர் பஸில் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

அலரி மாளிகையில் கடந்த செவ்வாய்க்கிழமை சமுர்த்தி முகாமையாளர்களுடன் இடம்பெற்ற சந்திப்பில் கலந்துகொண்ட போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

மேலும் இந்த சந்திப்பின் போது சமுர்த்தி, பொருளாதார, நுண் நிதி, சுயதொழில் மற்றும் வர்த்தக அபிவிருத்தி தொடர்பிலும் கலந்துரையாடப்பட்டுள்ளது.

அத்தோடு 2021 வரவு – செலவுத் திட்டங்களை கிராமப்புற அளவில் செயற்படுத்துவதில் சமுர்த்தி திணைக்களத்துக்கு விசேடபொறுப்பு உள்ளது என்றும்பஸில்ராஜபக்ஷசுட்டிக்காட்டியுள்ளார்.

அத்தோடு சமுர்த்தி பெறுநர்களின் ஜீவனோபாய மார்க்கத்தை கிராமிய பொருளாதாரத்தை மேம்படுத்தும் திட்டத்தின் கீழ் கொண்டு வரும் வேலைத் திட்டத்தில் இணைந்து பணியாற்றுமாறும்சமுர்த்திமுகாமையாளர்களுக்கு அவர் அழைப்பு விடுத்துள்ளார்.

இந்த விடயம் தொடர்பாக உலக சுகாதார ஸ்தாபனத்தினுடன் கலந்துரையாடி, நாட்டுக்குப் பொருத்தமான தடுப்பூசியை பெற்றுக்கொள்ளவுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# நாட்டில் வீதி விபத்துக்களில் 10 நாள்களில் 47 பேர் பலி!

கடந்த டிசெம்பர் 20 ஆம் திகதி முதல் நேற்று காலை வரையான காலப் பகுதியில் நாடு முழுவதும் ஏற்பட்ட வீதி விபத்துக்களில் 47 பேர் உயிரிழந்துள்ளனர் என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்தக் காலக் கட்டத்தில் மொத்தம் 573 விபத்துக்கள் பதிவாகியுள்ளன.

இந்த விபத்துக்களில் 127 பேர் பலத்த காயமடைந்துள்ளனர் எனவும், 394 பேர் சிறு காயங்களுக்குள்ளாகியுள்ளனர் எனவும் பொலிஸ் ஊடகப் பேச்சாளரும், பிரதிப் பொலிஸ் மா அதிபருமான அஜித் ரோஹன தெரிவித்தார்.

அத்துடன் இதன்போது 132 வாகனங்களும் சேதமாகியுள்ளன.

புத்தாண்டு தினத்துக்கு அடுத்த பல நாள்கள் தீர்க்கமானவை என்பதால் வாகன சாரதிகளும், பாதசாரிகளும் அவதானத்துடன் செயற்படுமாறும் பொலிஸார் வலியுறுத்தியுள்ளனர்.

# விருந்துபசார நிகழ்வுகளைச் சுற்றிவளைக்க பொலிஸார் சிறப்பு நடவடிக்கை முன்னெடுப்பு!

கொழும்பு, டிசெ. 31

தனிமைப்படுத்தல் சட்டத்தை மீறி நடைபெறும் விருந்துபசார நிகழ்வுகளைக் கண்டறிய இன்று முதல் நாளை வரை சிறப்பு சோதனை முன்னெடுக்கப்படும் என பொலிஸ் ஊடகப் பேச்சாளரும், பிரதிப் பொலிஸ் மா அதிபருமான அஜித் ரோஹன தெரிவித்தார்.

தனிமைப்படுத்தல் சட்டத்தை மீறி, குறிப்பாக இரவில் நடத்தப்படும் விருந்துபசார நிகழ்வுகள் மற்றும் கூட்டங்கள் தொடர்பாகச் சுற்றிவளைப்பு மேற்கொள்ள சிறப்பு பொலிஸ் குழு நியமிக்கப்பட்டுள்ளது என்றும் அவர் கூறினார்.

இதே வேளை தனிமைப்படுத்தல் சட்டத்தை மீறி, பண்டிகை காலங்களில் விருந்துபசார நிகழ்வுகளை நடத்தும் ஹோட்டல்கள் மற்றும் உணவகங்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்று பொது சுகாதார பரிசோதகர்கள் கடந்த வாரம் எச்சரிக்கை விடுத்திருந்தனர்.

சுகாதார அமைச்சால் வர்த்தமானி செய்யப்பட்ட சுகாதார வழிகாட்டுதல்களின் படி உட்புற மற்றும் வெளிப்புற விருந்துபசார நிகழ்வுகள் மற்றும் ஒன்றுகூடல்கள் தடை செய்யப்பட்டுள்ளன என்று பொது சுகாதார பரிசோதகர்கள் சங்க செயலாளர் எம். பாலசூரிய சுட்டிக்காட்டியுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.


சமூக நல அறிவிப்பு



முகக் கவசங்களை உங்கள் கழுத்தில் தொங்கவிடாதீர்கள்....!



முகக் கவசங்களை அணிவதற்கு முன்னர் கைகளைக் கழுவிக் கொள்ளுங்கள்.



முகக் கவசங்களை அணியும்போது அதன் முன்பக்கத்தை தொடாதீர்கள்.



முகக் கவசங்கள் உங்களுடைய மூக்கையும் வாயையும் மூடுவதையும், உங்களுடைய கன்னத்தின் கீழாக, உங்கள் மூக்கின் மேலாக மற்றும் உங்களுடைய முகத்தின் பக்கவாட்டுகளில் பொருந் துவதையும் உறுதிப்படுத்திக் கொள்ளுங்கள்.



காதில்மாட்டியுள்ள வளையங்களைப் பற்றியிழுத்து அல்லது முடிச்சுகளை அவிழ்த்து உங்கள் முகக் கவசங்களைக் கவனமாக கழற்றுங்கள்.

ஒவ்வொரு நாளும் துணி முகக் கவசங்களை சூடான நீரில் (60செல்சியஸ்) சவர்க்காரம் அல்லது சலவைத்தூள் கொண்டு துவையுங்கள்.





முகக் கவசங்களைக் கழற்றுவதற்கு முன்னரும் முகக் கவசங்களைக் கழற்றிய பின்னரும் உங்கள் கைகளைக் கழுவுங்கள் அல்லது சுத்தம் செய்யுங்கள்.

சமூக அக்கறையுடன் - கொரோனா தொடர்பான விழிப்புணர்வுத் தகவல்களை உங்களுக்கு வழங்க இன்று அனுசரணை வழங்குகின்றனர்:-

பசுமை PASUMAI

பசுமை உயிரியல் கூட்டுப்பசளை

பச்சை இலைகள், தாவர கழிவுகள், கரி ஆகிய மூலப்பொருட்களால் தயாரிக்கப்பட்டது.
விலங்குக் கழிவுகள் அற்றது.
சாதாரண கூட்டுப்பசளைகளை விட மிக மிக அதிகமான நுண்ணுயிரிகளையும் தாவர போசணை மூலகங்களையும் தன்னகத்தே கொண்டது.



போசணை உள்ளடக்கம்:

| | | |
|---|---|---|
| சேதன கரிமம் | 25.7 | 25% |
| நைதரசன் (தழைச்சத்து) N | 2.0 | 3.5% |
| பொஸ்பரஸ் (மணிச்சத்து) P | 0.5 | 1.0% |
| பொட்டாசியம் (சாம்பல்சத்து) K | 0.2 | 0.6% |

Ca, Mg, Mn, Zn, Fe, Cu ஆகியவற்றுடன் ஏனைய தாவர நுண் போசணை மற்றும் போசணை மூலகங்கள்

உற்பத்தி ஆதரவு
சார பூமி லங்கா – உயிரி உற்பத்தி நிறுவனம்
ஆராய்ச்சி ஆய்வுகூடம், கண்டி.

இது ஒரு கற்பகவனம் செயற்திட்டம்

021 492 7778 pasumailanka@gmail.com www.pasumai.lk facebook.com/pasumaiagri



## சாயி வந்தனன் வாழ்வு தந்தனன்



# ஆற்றில் மூழ்கி இறந்தவரைக் கரையில் எடுத்து உயிர் தந்தார்

வே.வரதசுந்தரம்

**நான் அழைத்தால் மட்டுமே நீங்கள் என்னிடம் வருகிறீர்கள்.**
**அப்படிவரும்போது எனக்கென்று எதுவும் கொண்டுவராதீர்கள்.**
**விரித்த கரமும் திறந்த மனமுமாக வாருங்கள்.**
**அன்பை மட்டும் கொண்டு வாருங்கள்**
**என்னிடம் இருந்து நிறையப் பெற்றுச் செல்லுங்கள்**
**...சாயிபாபா**

திருகோணமலை மண்ணின் மைந்தன் எஸ்.டி. சிவநாயகம் ஐயா அவர்கள் இலங்கையின் மூத்த தமிழ்ப் பத்திரிகையாளர். தினபதி, சிந்தாமணி ஆகிய பத்திரிகைகளின் ஸ்தாபக ஆசிரியர். இன்றைய புகழ் பூத்த பல தமிழ் பத்திரிகையாளர்கள் அவர்தம் மாணவர்கள். யானும் சிவநாயகம் ஐயாவின் நிழற்கீழ் தினபதி, சிந்தாமணி பத்திரிகைகளில் பணிபுரிந்த வேளை எழுத்துத்துறை நுட்பங்களை, உத்திகளை பயின்றமையைப் பெரும்பேறாக நன்றியுடன் போற்றுகிறேன்.

ஆரம்ப காலத்தில் சீர்திருத்தவாதியாக இருந்த அவர் பின்னர் உறுதிமிக்க சாயிபக்தனாக மாறியமை பகவான் அருளாலன்றோ! கொழும்பு ஸ்ரீ சத்திய சாயி பாபா நிலைய ஸ்தாபகத் தலைவர் சிவநாயகம் சாயிசேவையில் ஈடுபட்டவர். ஆசிரியத் துறையில் நீண்டகாலம் சேவையாற்றிய அவரது பாரியார் மங்களம் தனது கணவருடன் இணைந்து கொழும்பு ஸ்ரீ சத்திய சாயி பாபா நிலைய மங்கையர் அமைப்பின் தலைவியாகப் பணி பல ஆற்றியவர்.

சிவநாயகம் ஐயா அவர்கள் தனக்கேயுரிய பாணியில், படிப்போர் மயிர்கூச்செறியும் வண்ணம் கூறும்



**கொழும்பு ஸ்ரீ சத்திய சாயி பாபா நிலைய ஸ்தாபகத் தலைவர் சிவநாயகம், அவரது பாரியார் மங்களம் கொழும்பு சாயி அடியார்களால் கௌரவிக்கப்பட்டபோது.**

பகவான் சாயிபாபாவின் அற்புதம் கேளீர்:

'அந்தச் சடலம் தரையில் கிடத்தப்பட்டிருந்தது. இரவு மூன்றுமணியிருக்கும். எங்கும் அரை இருட்டு. வானில் பிறைச்சந்திரன் முகிலில் மறைந்து மங்கியிருந்தான். கூடச்சென்ற சாயி யாத்திரிகள் துடித்துப் போனார்கள். செய்வதறியாது வட்டமாகநின்று 'சாயிராம்!; சாயிராம்!'; என்று ஒலித்துக் கொண்டிருந்தார்கள்.

எங்களோடு மட்டக்களப்பைச் சேர்ந்த டாக்டர் அமரசிங்கம் என்ற மருத்துவரும் யாத்திரிகராக வந்திருந்தார். அவர் ஓடி வந்து கூட்டத்தைப் பிரித்துக் கொண்டு சடலத்தின் நெஞ்சில் கையைவைத்துப் பார்த்தார். பின்நாடி பிடித்துப் பார்த்தார். பக்கத்தில் நின்றவர் வைத்திருந்த டோச்லைட்டைப் பறித்து சடலத்தின் மூடியிருந்த கண்களைச் சற்றுப் பிரித்து உள்ளே ஒளியைப் பாய்ச்சிப் பார்த்தார். நான் அவரைப் பாரத்துக் கொண்டே நின்றேன். அவர் அண்ணார்ந்து பார்த்துப் பரிதாபமாக உதட்டைப் பிதுக்கினார். நான் திகைத்தேன். அப்போதுதான் அந்த அற்புதம் நிகழ்ந்தது. அதற்கு முன்பாக நடந்தகதை கேளுங்கள்:-

இது நடந்து இப்போது பலவருடங்கள் ஆகிவிட்டன. 1966?ஆம் ஆண்டில் நாங்கள் 102 பேர் யாத்திரிகளாக முதன்முறை சாயிபாபாவிடம் சென்றோம். திருச்சியில் இரண்டு பஸ்களில் புறப்பட்ட நாம் பங்களூர் சென்று வைட்பீல்டில் சாயிபகவானைத் தரிசித்தோம். திரும்புகையில் சென்னை வந்து, அங்கிருந்து சிதம்பரம் தரிசனத்துக்காகச் சென்று கொண்டிருந்தோம். அதிகாலை ஐந்துமணிக்குச் சிதம்பரம் கோயிலுக்குள் புகுந்து நடராஜப் பெருமானைத் தரிசிப்பது என்பது எங்கள் திட்டம்.

சிதம்பரம் நகரத்தை அடைந்து காலைக்கடனை முடித்துக் கொண்டு தரிசனத்துக்குப் போவதற்கு வசதி இருக்காது என்ற காரணத்தினால் வழியிலேயே ஏற்ற இடத்தில் தாமதித்துக் காலைக்கடனை முடித்துக் கொண்டுபோகலாம் என்று முடிவுசெய்தோம். வழியில் ஒரு காட்டாறு ஓடிக்கொண்டிருந்தது. அதன் மேலே உறுதியான இரும்புப்பாலம் அமைந்திருந்தது. அதையொட்டி இரண்டு பஸ்களையும் நிறுத்திவிட்டு, கீழே இறங்கிஅனைவரும் கையில் ரோச் லைட்டுகளுடன் பற்றைகளைத் தேடிச் சென்றோம்.

எங்களோடு வந்தவர்களில் மகேசன் என்று ஒருவர். அவர் கையில் தூக்குச் செம்பு ஒன்றையும் எடுத்துக் கொண்டு தண்ணீர் மொள்ளுவதற்காக ஆற்றங்கரையில் இறங்கினார். அங்கு சிமெண்டுக் கட்டு இருந்தது. அதில் கால் வைத்தபடி குனிந்து தண்ணீர் எடுக்கையில் விழுந்துவிட்டார். அந்த நேரம் நானும் என் மனைவியும் பாலத்தின்மேலே நின்று கொண்டிருந்தோம். என் கையில் பிரகாசமான மூன்று பற்றிடோச் இருந்தது. தண்ணீரில் ஏதோ விழும் சத்தம் பெரிதாக கேட்கவே டோச் அடித்துப் பார்த்தேன். ஒருவர் நீரில் மூழ்கியபடி, நீர் ஓட்டத்தினால் இழுத்துச் செல்லப்படுவதைக் கண்டோம். சடலம் போய்க்கொண்டே இருந்தது.

எல்லோரும் ஓடிவந்தார்கள். நாங்களும் வேகமாகக் கீழே இறங்கி 'சாயிபாபா! சாயிபாபா!' என்று ஓலமிட்டோம். அவ்வளவுதான் எங்களால் செய்ய முடிந்தது. அந்த ஆற்றில் குதித்து மூழ்கியவரைக் காப்பாற்ற எங்கள் யாருக்குமே துணிவு ஏற்படவில்லை. அதற்குக் காரணம் இரண்டு. யாருக்கும் நீந்தத் தெரிந்திருக்கவில்லை. அத்தோடு தண்ணீரின் ஆழம் எவ்வளவு இருக்குமோ என்று தெரியாத நிலை.

இப்படியாக நாம்கூப்பாடு போட்டுக் கொண்டிருக்கும் வேளையில் எங்கிருந்தோ ஒருவர் வந்தார். என் மனைவி நின்ற இடத்திலே கையில் கொண்டுவந்த பிரம்புக் கூடையை வைத்தார். தலையில் கட்டியிருந்த துண்டையும் எடுத்துப் போட்டார். திடீரென்று தண்ணீரில் பாய்ந்து வேகமாக நீந்திச் சென்று மகேசனைப் பிடித்து இழுத்துக் கொண்டுவந்து அலக்காகத் தூக்கித் தரையில் கிடத்தினார்.

அப்போதுதான் நானும் என் மனைவியும் அவரைப் பார்த்தோம். ஏதோவொரு குக்கிராமவாசி போற் காணப்பட்டார். இடுப்பில் மட்டும் ஒருவேட்டியைக் கொடுக்காகக் கட்டியிருந்தார். மேல் தேகம் திறந்தே இருந்தது. சட்டை எதுவும் இல்லை. அவர் யாருடனும் பேசவுமில்லை. இந்த நேரத்தில் தான், நான் ஆரம்பத்தில் சொன்னபடி, டாக்டர் அமரசிங்கம் ஓடிவந்து சடலத்தைப் பரிசோதனை செய்தார். மகேசன் இறந்துவிட்டார் என்றே முடிவாகியிருந்தநிலை.

அப்போது அந்தக் கிராமத்துப் பேர்வழி, கீழேகுனிந்து மகேசனுடைய கன்னத்தில் தட்டினார். என்ன ஆச்சரியம்! நீரில் மூழ்கி இறந்துவிட்டவர் எனக் கருதப்பட்ட மகேசன. கண் விழித்தார். தேகத்தை அசைத்தும் கொண்டார். நாங்கள் எல்லோரும் ஆனந்தம் அடைந்தோம். என்றாலும் எங்கள் கண்களின் முன்னால் ஓர் அற்புதம் நிகழ்ந்து கொண்டிருக்கிறது என்பதை நாங்கள் உணரவில்லை.

மகேசனைக் கைகொடுத்துத் தூக்கிவிட்ட அந்த உயிர் காத்த மனிதருக்கு ஒருவார்த்தை நன்றி சொல்லலாம் என்று தேடினால் அவரைக் காணவில்லை. எங்கோ மாயமாக மறைந்துவிட்டார். அப்போதுதான் எங்களுக்கு மயிர்க் கூச்செறிந்தது. நடந்தவற்றை நாங்கள் எண்ணிப் பார்த்தோம். நாங்கள் நின்றிருந்த இடத்திலிருந்து சுற்றுவட்டாரத்தில் கண்ணுக்கு எட்டிய தூரத்துக்குக் குடிமனைகள் இருந்ததாகத் தெரியவில்லை. எங்கிருந்தும் ஒரு குப்பி விளக்கின் ஒளிக் கதிர் கூடக் காணப்படவில்லை.

அப்படியான பிரதேசத்தில் அந்த நேரத்தில் எந்தக் கிராமத்தான் அங்கு வந்திருக்கமுடியும்? அப்படி ஒருவன் வந்தாலும் என்ன நடந்தது என்பதை அவன் அறிந்திருக்க நியாயமில்லை. நடந்தவற்றை எல்லாம் முன்கூட்டியே அறிந்தவன் போல, முன்னேற்பாடு எதுவுமின்றி, வந்ததும் வராததுமாக எப்படித் தண்ணீரில் குதித்துச் செய்ய வேண்டியவற்றைச் செய்திருக்கமுடியும்?

இந்தியாவில் எந்த ஒருசிறிய காரியம் செய்தாலும் ஒருகிராமத்தான் தான் செய்த காரியத்தைத் தம்பட்டமடித்து அதற்கான கூலியை ஒன்றுக்கு நாலாகக் கறக்கத்தான் முயற்சி செய்வான். தண்ணீரில் குதித்துத் தக்க சமயத்தில் இந்த மனிதரைக் காப்பாற்றியிருக்கிறேன் எனக்கு நூறு ரூபாய் தாருங்கள் என்று அவன் பேரம. பேசாமலும், காசை வாங்காமலும் அந்த இடத்தைவிட்டுப் போவானா?

இவற்றை எல்லாம் எண்ணிப் பார்க்கும்போது அங்குவந்து அந்த நேரத்தில் காப்பாற்றியவர் வேறு யாருமல்லர், சாயி பகவான்தான் என்பதை எல்லோரும் ஒப்புக்கொண்டனர். இந்த அதிசய சம்பவம் நிகழ்ந்ததை எங்கள் கண்களால் நிதர்சனம் கண்டது நானும் என்மனைவியும் மட்டுமல்ல, எங்களோடு யாத்திரையில் வந்த 202 கண்களும்கூடவே கண்டன என்பது உண்மையாகும்.

1971 ஆம் ஆண்டு சாயிபாபாவின் 46 ஆவது பிறந்தநாள் கொண்டாட்டம் பம்பலப்பிட்டி சரஸ்வதி மண்டபத்தில் காலஞ்சென்ற டாக்டர் நல்லைநாதன் அவர்களின் தலைமையில் கொண்டாடப்பட்டது. அதில் என்னை ஒருசொற்பொழிவு ஆற்றுமாறு கேட்டிருந்தார்கள்.

நான் பேசும்போது, சிதம்பரத்தின் அருகே நடந்த இச்சம்பவத்தை 'பாபாவின் அருளால் மாண்டவன் மீண்ட கதை' என்று சொன்னேன். அப்படிச் சொல்லிவிட்டு, 'மகேசன் ஒருசிறந்த சாயிபக்தர், சாயிபாபாவின் பிறந்தநாள் கூட்டத்தில் கலந்து கொள்ளாமல் இருக்க மாட்டார். இங்கே கூடி இருக்கும் இந்தப் பெருங்கூட்டத்தில் அவர் வந்திருக்கவும் கூடும். அவர் வந்திருந்தால் தயவுசெய்து எழுந்து நிற்கும்படி அவரைக் கேட்டுக் கொள்ளுகிறேன்' என்று சொன்னேன்.

உடனே மகேசன் கூட்டத்தின் பின்பகுதியில் கூடியிருந்த சாயிபக்தர்களின் நெரிசலுக்குள் இருந்து எழுந்து நின்று தமது முகத்தைச் சபையோருக்குக் காட்டினார். சபையில் ஒரே கலகலப்பும், கைதட்டலும் ஏற்பட்டன.



சாயிபகவானின் மிகப்பெரிய அற்புதங்களில் ஒன்றை அனைவரும் அறிந்து இறும்பூதெய்தினர்.

கிறிஸ்துநாதர், இறந்தவரை உயிர்பெற்று எழச் செய்தார் என்று பைபிளிலும், இறந்தவர்களைத் திரும்பவும் பிறந்தெழச்செய்தார் திருஞானசம்பந்தர் என்று தேவார வரலாற்றிலும், நாம் படிக்கிறோம் அல்லவா? அத்தகைய அதிசயங்களை இந்தக் கலியுகத்திலே செய்யக் கூடியவராக, ஓர் அற்புத புருராக, விளங்குகிறார் நமது இதயவாசி ஸ்ரீ சத்யசாயிபாபா'

இதுகேட்ட மாத்திரத்தே புட்டபர்த்தி யாத்திரைவந்த அடியார்கள் தத்தம் தலைமேற் கைகூப்பி பகவான் பாபாவை மனத்திருத்தி கூறுவர்:

**'என்னே! என்னே!**
**எங்கள் சாயிபாபா அற்புதம்!'**

(தொடரும்....)

காலைக்கதிர் Kalaikkathir



தன்னிச்சையான, ஜனநாயக விரோத, சட்டவிரோதமான

# மாவையின் செயற்பாட்டினால்தான் யாழ். மாநகர சபையை இழந்தோம்



சுமந்திரன் காட்டமான கடிதம்

யாழ்ப்பாணம்,டிசெம்பர் 29

"உங்களுடைய தன்னிச்சையான, ஜனநாயக விரோத, சட்டவிரோத செயற்பாட்டினால் போட்டியின்றி வென்றிருக்க வேண்டிய யாழ் மாநகர சபை முதல்வர் பதவியை நாம் இழந்திருக்கின்றோம்.

"தமிழ்த்தேசிய அரசியல் களத்தில் மிக முக்கிய அடையாளமான யாழ் மாநகர சபை தலைமையை எமது கட்சி இழந்தமைக்கு மேற்சொல்லப்பட்ட தங்களது நடவடிக்கைகளே காரணமாகும் என்பதையும், இதனால் ஏற்படும் கட்சியின் பின்னடைவுக்கும் தாங்களே முழுப் பொறுப்பையும் ஏற்க வேண்டும் என்பதையும் இத்தால் பதிவு செய்கின்றேன்."

- இவ்வாறு காட்டமாகத் தெரிவிக்கும் கடிதம் ஒன்றை இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின்

தலைவர் மாவை சேனாதிராசாவுக்கு அனுப்பி வைத்திருக்கின்றார் கட்சியின் பிரதிப் பொதுச்செயலாளரும் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான எம்.ஏ. சுமந்திரன்.

இன்று காலை யாழ். மாநகரசபை மேயர் தெரிவு நடந்த கையோடு இந்தக் கடிதத்தை அவர் அனுப்பி வைத்திருக்கின்றார். அந்தக் கடிதத்தின் முழு விவரம். வருமாறு:-

திரு. மாவை சேனாதிராசா<br>
தலைவர்<br>
இலங்கை தமிழ் அரசுக் கட்சி<br>
30, மார்டின் வீதி<br>
யாழ்ப்பாணம்

ஐயா,

யாழ்ப்பாண மாநகர சபை

இன்று யாழ் மாநகர சபை மேயர் தேர்வில் தமிழ் தேசிய கூட்டமைப்பு தோல்வியடைந்துள்ளது.

வரவு - செலவு திட்ட முன்மொழிவில் இரண்டு தடவைகள் தோல்வியுற்ற காரணத்தால் எமது மேயர் பதவி இழந்ததை அடுத்து நடந்த நிகழ்வுகளை இங்கே வரிசைப்படுத்த விரும்புகிறேன்:-

19/12/20 அன்று தமிழ் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தன் ஐயாவின் இல்லத்தில் சந்தித்ததை அடுத்து, வீட்டுவாசலில் வைத்து யாழ்மாநகர சபைக்கு புதிய மேயர் வேட்பாளராக வேறொருவரை நியமிப்பதே உசிதம் என்றும் அதற்குப் பொருத்தமானவர் முன்னால் நாடாளுமன்ற உறுப்பினர் திரு. சொலமன் சிறில் என்பது என்னுடைய கருத்து என்பதையும் கூறினேன்.

21/12/20 அன்று நீங்கள் எனக்குத் தொலைபேசி அழைப்பு எடுத்து, நான் சொன்ன கருத்தோடு நீங்கள் உடன்படுவதாகவும் இது சம்பந்தமாக பாராளுமன்ற உறுப்பினர் திரு. சிவஞானம் சிறிதரனின் கருத்தும் திரு. சொலமன் சிறில் என்பதே என்றும் சொன்னீர்கள். நீங்கள் யாழ்ப்பாணம் செல்வதாகவும் அங்கே உறுப்பினர்களோடு நடத்தும் கூட்டத்திற்கு என்னை வரமுடியுமா என்றும் கேட்டீர்கள். கட்சியின் சார்பில் அரசமைப்பு யோசனைகள் நிறைவு செய்யும் வரை என்னால் வரமுடியாது என்றும் திருசொலமன் சிறில் வேட்பாளராக வருவதில் எனக்கு உடன்பாடு உள்ளது என்றும் கூறினேன். எப்படியாயினும் இறுதிமுடிவு எடுப்பதற்கு முன்பதாக என்னோடு திரும்பவும் பேசுவதாக கூறியிருந்தீர்கள்.

எட்டு நாட்களுக்குப்பிறகு நேற்றைய தினம் 29/12/2020 காலையில் நீங்கள் எனக்குத் தொலைபேசி அழைப்பெடுத்து மாநகரசபை உறுப்பினர்களில் அநேகமானவர்கள் திரு ஆர்னோல்டையே திரும்பவும் வேட்பாளராக நிறுத்தவேண்டும் என்று விரும்புவதாகவும், இறுதித் தீர்மானம் எடுப்பதற்காக காலை 10.30 மணிக்கு கூட்டம் ஒன்று நடத்தப்போவதாகவும் சொன்னீர்கள்.

நான் கொழும்பில் இருந்து பிரயாணமாகி வந்துகொண்டிருக்கின்றேன் என்றும் மதியம் 1 மணிக்குப் பின்னரே யாழ்ப்பாணத்திற்கு வந்தடைவேன் என்றும் அதற்குப் பின்னர் கூட்டத்தை நடாத்தினால் நான் கலந்து கொள்வேன் என்றும் உங்களுக்கு நான் அறியத் தந்தேன்.

அதே தொலைபேசி உரையாடலில், புதிய மேயர் வேட்பாளர் சம்பந்தமாக எனது நிலைப்பாட்டைத் தெளிவாக திரும்பவும் கூறினேன்:-

வரவு - செலவுத் திட்டம் தோல்வியுற்றால் இராஜிணாமா செய்ய வேண்டியது ஒரு ஜனநாயக விழுமியம் மட்டும்அல்ல, அது ஒரு ஜனநாயக மரபாகவும் இருந்திருக்கின்றது. இந்த மரபு பின்பற்றப்படாத காரணத்தால்தான் சட்டத்தில் திருத்தங்கள் செய்யப்பட்டு இராஜினாமாச் செய்ததவாக கருத வேண்டும் என்று அது ஒருசட்டத்தின் தேவைப்பாடாகவும் ஏற்படுத்தப்பட்டது.

சட்டத்தின் செயற்பாட்டினால் இராஜினாமா செய்தவர் ஆனவர் மீண்டும் அப்பதவிக்குப்போட்டியிடுவது சட்டத்திற்கு முரணானது மட்டும் அல்லாமல் ஜனநாயக விழுமி யங்களையும் மீறுகின்ற செயலாகும்.

ஆகையால் இராஜினாமா செய்தவரான ஆர்னோல்டைத்தவிர வேறொருவரைத்தான் எமது வேட்பாளராகதெரிவு செய்ய வேண்டும் என்பதை திட்டவட்டமாக சொன்னேன்.

வரவு - செலவுத்திட்டத்தின் தோல்வியின் காரணமாக இராஜினாமா செய்தவர்களை மீளவும் வேட்பாளர்களாக நிறுத்தினால் தமது கட்சி அதை எதிர்க்கும் என்றும், அப்படி அல்லாது வேறு எவரையேனும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நிறுத்தினால், தாம் ஆதரவு கொடுப்போம் என்றும் சில நாள்களுக்கு முன்னர் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணித் தலைவர் திரு கஜேந்திரகுமார் பொன்னம் பலம் பகிரங்கமாக அறிவித்திருந்தார். இவ் அறிவிப்பு எமது கட்சி வேட்பாளரை வேறு கட்சியினர் தெரிவு செய்யும் செயற்பாடு அல்ல. நான் மேற்சொன்ன ஜனநாயக விழுமியத்தின் அடிப்படையிலான அறிவிப்பே அது.

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் யாழ்ப்பாண மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள் இருவரினதும் கருத்துக்கு மாறாகவும், நீங்கள் எனக்குச் சொன்ன தங்களது சொந்தக் கருத்துக்கே மாறாகவும், தன்னிச்சையாக நேற்று காலை 10.30 மணிக்கு இலங்கைத் தமிழரசுக் கட்சிக்கு ஒதுக்கப்பட்ட யாழ் மாநகர சபை மேயர் பதவிக்கு, ஏற்கனவே இராஜனாமா செய்தவரான திரு ஆர்னோல்ட்டையே வேட்பாளராக அறிவித்திருந்தீர்கள்.

உங்களுடைய மேற்சொன்ன, தன்னிச்சையான, ஜனநாயக விரோத, சட்டவிரோத செயற்பாட்டினால் போட்டியின்றி வென்றிருக்க வேண்டிய யாழ் மாநகர சபை முதல்வர் பதவியை நாம் இழந்திருக்கின்றோம்.

தமிழ்த்தேசிய அரசியல் களத்தில் மிக முக்கிய அடையாளமான யாழ்மாநகர சபை தலைமையை எமது கட்சி இழந்தமைக்கு மேற்சொல்லப்பட்ட தங்களது நடவடிக்கைகளே காரணமாகும் என்பதையும், இதனால் ஏற்படும் கட்சியின் பின்னடைவுக்கும் தாங்களே முழுப் பொறுப்பையும் ஏற்க வேண்டும் என்பதையும் இத்தால் பதிவு செய்கின்றேன்.

இப்படிக்கு,<br>
எம்.ஏ.சுமந்திரன்<br>
பா. உ. யாழ் மாவட்டம்<br>
பிரதி பொதுச்செயலாளர்<br>
இலங்கை தமிழ் அரசுக் கட்சி<br>
-என்று உள்ளது.

# புதிய அரசமைப்பு வரும் வரைக்கும் மாகாண சபைத் தேர்தல் வேண்டாம்

இராஜங்க அமைச்சர் நாலக கொடஹேவா வலியுறுத்து



புதிய அரசமைப்பு இயற்றப்படும்வரை மாகாண சபைகளுக்கான தேர்தலை நடத்தாமல் இருப்பதே சிறந்த முடிவாக அமையும்.

- இவ்வாறு இராஜங்க அமைச்சர் நாலக கொடஹேவா தெரிவித்தார்.

மாகாண சபைத் தேர்தல் தொடர்பில் கருத்து வெளியிடுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

கடந்த ஆட்சியின்போது மாகாண சபைகள்மற்றும் உள்ளூராட்சிசபைகளின் தேர்தல்கள் பிற்போடப்பட்டன. இதற்கு எதிராக எமது அணியினர் விமர்சனங்களை முன்வைத்தனர் என்ப துடன் திட்டமிட்ட அடிப்படையில் தேர்தல் பிற் போடப்படுகின்றது எனவும் சுட்டிக்காட்டினர்.

அப்படியானால் தற்போது தேர்தலை நடத்தும் பொறுப்பு எமது அரசுக்கு இருக்கின்றது. இது பற்றியே அமைச்சரவையில் கலந்துரையாடப்பட்டிருக்கலாம்.

அத்துடன் மாகாண சபை முறைமை தொடர்பில் பல கோணங்களில் கருத்துகள் முன்வைக்கப்பட்டுவருகின்றன. குறிப்பாக எமது அணிக்கு ஆதரவு வழங்கியவர்களில் சிலர், மாகாண சபைகள் வெள்ளை யானை எனவும், அவை இந்தியாவால் பலவந்தமாகத் திணிக்கப்பட்டவை எனவும் வாதிட்டு வருகின்றனர்.

தற்போது புதியதொரு அரசமைப்பை இயற்றும் பணி இடம்பெற்று வருகின்றது. தேர்தல் முறைமை குறித்து அதில் முடிவு எடுக்கப்படும். நிர்வாக முறைமையும் தீர்மானிக்கப்படும். எனவே, புதிய அரசமைப்பு இயற்றப்படும் வரை மாகாண சபைத் தேர்தலை நடத்தாமல் இருப்பதே சிறப்பு - என்றார்.

உக்ரைனிலிருந்து இலங்கை வந்த

## சுற்றுலாப் பயணிகளில் மூவருக்குக் கொரோனா

இலங்கைக்கு சுற்றுலா வந்த உக்ரைன் பிரஜைகளில் மூவருக்குக் கொரானா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

இவர்கள் மூவருக்கும் நேற்றிரவு தொற்று உறுதி செய்யப்பட்டது என சுகாதார சேவைகள் பிரதிப் பணிப்பாளர் நாயகம் விசேடவைத்திய நிபுணர் ஹேமந்த ஹேரத் தெரிவித்துள்ளார்.

கொரோனாத் தொற்று உறுதி செய்யப் பட்டுள்ள சுற்றுலாப் பயணிகளை மருத்துவ சிகிச்சைகளுக்கு அனுப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது எனவும் அவர் கூறினார்.

உக்ரைனிலிருந்து 180 சுற்றுலாப் பயணிகளை ஏற்றி வந்த விமானம் மத்தளை சர்வதேச விமான நிலையத்தில் நேற்றுமுன்தினம் தரையிறங்கியது. இலங்கைக்கு சுற்றுலாப் பயணிகளை அழைத்து வரும் செயற்றிட்டத்தின் கீழ் இவர்கள் வரவழைக்கப்பட்டனர். நாட்டை வந்தடைந்துள்ள சுற்றுலாப் பயணிகள் பெந்தோட்டை மற்றும் கொக்கல பகுதிகளிலுள்ள ஹோட்டல்களுக்கு அழைத்து செல்லப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# டக்ளஸைக் கட்டிப்பிடித்துக்கொண்டு இருக்கும் 10 பேரும் கட்சியில் இருந்து நீக்கப்படுவார்கள்!

முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் கூறுகின்றார்

(எஸ்.நிதர்ஷன்)

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியிலிருந்து இருந்து நீக்கப்பட்ட வி.மணிவண்ணன் மேயராகத் தெரிவாக ஆதரவு வழங்கி கட்சியின் கொள்கைக்குத் துரோகம் செய்த யாழ்ப்பாண மாநகர சபையின் 10 உறுப்பினர்களும் கட்சியில் இருந்து நீக்கப்படுவார்கள்.

- இவ்வாறு தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார்பொன்னம்பலம்ம்.பி.தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

மணிவண்ணனை ஆதரித்ததன் மூலம் கட்சியின் கொள்கைக்குத் துரோகம் இழைத்து, யாழ்ப்பணம் மாநகர சபையின் எமது கட்சியைப் பிரதிநித்துவப்படுத்தும் உறுப்பினர்கள் 10 பேர் டக்ளஸ் தேவானந்தாவுடன் கைகோர்த்து கட்டிப்பிடித்துக் கொண்டுள்ளனர். அவர்களை எமது கட்சியிலிருந்து நீக்குவோம். இந்த நிலைப்பாட்டில் நாம் மிகவும் உறுதியாக இருக்கின்றோம் - என்றார்.

# சுகாதார நடைமுறையை மீறிய 50 பஸ்களின் அனுமதி இரத்து!

சுகாதார வழிகாட்டல்கள் மற்றும் விதிமுறைகளை உரிய முறையில் கடைப்பிடிக்காத 50 பஸ்களின் வீதிப் போக்குவரத்து அனுமதிப் பத்திரங்கள் தற்காலிகமாக இரத்துச்செய்யப்பட்டுள்ளன என்று போக்குவரத்துத் துறை இராஜாங்க அமைச்சர் திலும் அமுனுகம தெரிவித்தார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இலங்கை போக்குவரத்துச்சபை சுகாதார நடைமுறை - விதிமுறைகளை உரிய முறையில் கடைப்பிடிக்கின்றது. எனினும், தனியார் துறையினரில் 90 சதவீதமானோர் மாத்திரமே இந்த நடைமுறையை பின்பற்றுகின்றனர்.

இந்தநிலையில், விதிமுறைகளைப் பின்பற்றாத 50 இற்கும் மேற்பட்ட தனியார் பஸ்களின் அனுமதிப் பத்திரங்களைத் தற்காலிகமாக இரத்துச் செய்துள்ளோம். என்றோ ஒருநாள் கொரோனாத் தொற்று இலங்கையை விட்டு நீங்கிய பின்னர்தான் அந்த பஸ்களுக்கான அனுமதிப்பத்திரங்கள் மீண்டும் வழங்கப்படும் - என்றார்.

## யாழ்.மாநகர சபை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...

இதன்படி ஒரு வாக்கு வித்தியாசத்தில் மணிவண்ணன் மேயராகத் தெரிவாகியுள்ளார்.

மாநகர சபையின் மேயர் தெரிவுக்கான விசேட அமர்வு வடக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் பற்றிக் நிரஞ்சன் தலைமையில் நேற்று காலை 9.30 மணியளவில் ஆரம்பமானது.

இதன்போது மேயர் வேட்பாளர்களாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சார்பில் முன்னாள் மேயர் இ.ஆனோல்ட், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் சார்பில் சட்டத்தரணி வி.மணிவண்ணன் ஆகியோரின் பெயர்கள் முன்மொழியப்பட்டன.

இது தொடர்பான வாக்கெடுப்பைப் பகிரங்கமாக நடத்துவதா அல்லது இரகசியமாக நடத்துவதா என உறுப்பினர்களிடத்தில் வாக்கெடுப்பு இடம்பெற்றது.

இதன்போது, சபை உறுப்பினர் அனைவரும் பகிரங்க வாக்கெடுப்பை நடத்த வேண்டும் என்றே கோரியிருந்தனர். இதன்படி மேயர் தெரிவுக்கான வாக்கெடுப்பு பகிரங்கமாக நடத்தப்பட்டது.

வாக்கெடுப்பில் ஆனோல்ட்டுக்கு 20 வாக்குகளும், மணிவண்ணனுக்கு 21 வாக்குகளும் கிடைத்தன.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் 15 உறுப்பினர்களும், ஐக்கிய தேசியக் கட்சியின் 3 உறுப்பினர்களும், தமிழர் விடுதலைக் கூட்டணியின் ஓர் உறுப்பினரும் மற்றும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் ஓர் உறுப்பினரும் ஆனோல்ட்டுக்கு ஆதரவாக வாக்களித்தனர்.

இதேவேளை, தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் 10 உறுப்பினர்களும், ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் (ஈ.பி.டி.பி) 10 உறுப்பினர்களும், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் ஓர் உறுப்பினரும் மணிவண்ணனுக்கு ஆதரவாக வாக்களித்தனர்.

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியைச் சேர்ந்த 3 உறுப்பினர்கள், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஓர் உறுப்பினர் என 4 பேர் வாக்கெடுப்பில் நடுநிலை வகித்தனர்.

இதற்கமைய யாழ். மாநகர சபையின் புதிய மேயராக சட்டத்தரணி வி.மணிவண்ணன் தெரிவு செய்யப்பட்டுள்ளார் என்று வடக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் சபையில் அறிவித்தார்.

கடந்த 16ஆம் திகதி யாழ். மாநகர சபையின் 2021ஆம் ஆண்டுக்கான வரவு – செலவுத் திட்டம் இரண்டாவது தடவையாகவும் சமர்ப்பிக்கப்பட்டு தோற் கடிக்கப்பட்டதால் மாநகர மேயராகப் பதவி வகித்த இ.ஆனோல்ட் தனது பதவியை இழந்திருந்தார். இதனால் புதிய மேயரைத் தேர்வு செய்வதற்கான வாக்கெடுப்பு நேற்று நடத்தப்பட்டது.

## மேலும் 636...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...

வைரஸ் தொற்றுடன் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

இதற்கமைய நாட்டில் மொத்தத் தொற்றாளர்களின் எண்ணிக்கை 42 ஆயிரத்து 699 ஆக அதிகரித்துள்ளது.

கொரோனாவின் மூன்றாவது அலை மூலம் இதுவரையில் 38 ஆயிரத்து 979 பேருக்கு வைரஸ் தொற்றியுள்ளது.

மொத்தத் தொற்றாளர்களில் 34 ஆயிரத்து 623 பேர் குணமடைந்துள்ளனர். 7 ஆயிரத்து 880 பேர் வைத்தியசாலைகளில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

## கொரோனா...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...

உயிரிழந்துள்ளனர் என்று அரச தகவல் திணைக்களம் அறிவித்துள்ளது.

மூன்று ஆண்களும், பெண் ஒருவருமே இவ்வாறு உயிரிழந்துள்ளனர். இவர்களில் மூவர் 60 வயதைக் கடந்தவர்கள்.

இதன்படி கொரோனா வைரஸ் தாக்கத்தால் இலங்கையில் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 199 ஆக அதிகரித்துள்ளது.

கொரோனா வைரஸ் தாக்கத்தின் மூன்றாவது அலை மூலம் 186 பேர் உயிரிழந்துள்ளனர். கொழும்பு மாவட்டத்திலேயே அதிகளவு உயிரிழப்புகள் இடம்பெற்றுள்ளன.

## நல்லூர் பிரதேச...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஆளுகைக்குள் இருந்த நல்லூர் பிரதேச சபையின் 2021ஆம் ஆண்டுக்கான வரவு – செலவுத் திட்டம் இரண்டாவது தடவைகள் தோற்கடிக்கப்பட்டதை யடுத்து தவிசாளர் தா.தியாகமூர்த்தி தனது பதவியை இழந்திருந்தார். இந்நிலையில், பிரதேச சபையின் புதிய தவிசாளரைத் தெரிவு செய்வதற்கான விசேட அமர்வு வடக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் பற்றிக் நிரஞ்சன் தலைமையில் நேற்று பிற்பகல் நடைபெற்றது.

இதன்போது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் (ரெலோ) சார்பில் குமாரசாமி மதுசுதனும், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் சார்பில் பத்மநாதன் மயூரனும் முன்மொழியப்பட்டனர்.

தொடர்ந்து வாக்கெடுப்பைப் பகிரங்கமாக நடத்துவதா அல்லது இரகசியமாக நடத்துவதா என உறுப்பினர்களிடத்தில் வாக்கெடுப்பு இடம்பெற்றது.

சபை உறுப்பினர்கள் அனைவரும் பகிரங்க வாக்கெடுப்பு கோரியதால், தவிசாளர் தெரிவு பகிரங்க வாக்கெடுப்பு மூலம் இடம்பெற்றது.

இதன்படி மதுசுதன் 08 வாக்குகளையும், மயூரன் 10 வாக்குகளையும் பெற்றனர்.

மதுசுதனுக்கு ஆதரவாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் 5 உறுப்பினர்களும், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் 2 உறுப்பினர்களும் மற்றும் ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் (ஈ.பி.டி.பி.) ஓர் உறுப்பினரும் வாக்களித்தனர்.

மயூரனுக்கு ஆதரவாக தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் 3 உறுப்பினர்களும், ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் (ஈ.பி.டி.பி.) 3 உறுப்பினர்களும், சுயேச்சைக் குழுவின் 2 உறுப்பினர்களும், ஐக்கிய தேசியக் கட்சியின் ஓர் உறுப்பினரும் மற்றும் தமிழர் விடுதலைக் கூட்டணியின் ஓர் உறுப்பினரும் வாக்களித்தனர்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஓர் உறுப்பினரும் மற்றும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் ஓர் உறுப்பினரும் சபை அமர்வில் கலந்துகொள்ளவில்லை.

அதன் அடிப்படையில் நல்லூர் பிரதேச சபையின் புதிய தவிசாளராக மயூரன் தெரிவு செய்யப்பட்டுள்ளார் என்று வடக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் சபையில் அறிவித்தார்.

## ஈசனைக் காப்பாற்ற...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...

நடவடிக்கைக்கு எதிர்ப்பு வெளியிட்டதோடு சபையைத் தவறாக வழிநடத்த வேண்டாம் என்று புதிய மேயர் மணிவண்ணனிடம் கோரிக்கை விடுத்தார். இதையடுத்து அனைவருக்கும் நன்றி தெரிவித்து சபை அமர்வை ஒத்திவைப்பதாக மேயர் அறிவித்தார்.

ஈ.பி.டி.பியின் உறுப்பினர் திருமதி யோகேஸ்வரி பற்குணராசா, 'மேயரே! சபை அமர்வு நடைபெறுவதால் பிரதி மேயரைத் தெரிவு செய்வது பொருத்தம் என்று கருதுகின்றேன்' என்று தெரிவித்தார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் உறுப்பினர் ப.தர்சானந்த், மேயர் பிரதி மேயர் தெரிவை நடத்த வேண்டியவர் உள்ளூராட்சி ஆணையாளர். தாங்கள் அல்லர். தாங்கள் அறிவிக்கலாம். பிரதி மேயரைத் தெரிவுசெய்யும் உரிமை சபைக்கு இல்லை என நான் தங்களிடம் தெரிவித்துக்கொள்கின்றேன் என்று கூறினார்.

கூட்டமைப்பு உறுப்பினர் ந.லோகதயாளன், சபையில் பிரதி மேயருக்கான வெற்றிடம் ஏற்பட்டால் மட்டுமே தெரிவை மேற்கொள்ளலாம். தற்போது அந்த நிலை ஏற்படவில்லை. இந்த விடயத்தை சட்ட ரீதியாக அணுகுங்கள் – என்றார்.

ஈ.பி.டி.பியின் உறுப்பினர் மு.றெமிடியஸ், மேயராகத் தெரிவாகியிருக்கும் உங்களுக்கு முதலில் எனது வாழ்த்துக்கள். பிரதி மேயர் என்பவர் தங்களின் அபிமானம் – ஆதரவைப் பெற்றவராக இருக்க வேண்டும் அல்லது சபையின் ஆதரவைப் பெற்றவராக இருக்க வேண்டும். அதுதான் முறை. அந்தவகையில் இந்த இடத்தில் தற்போது இருக்கின்ற பிரதி மேயருக்கு எதிராக அவரின் பதவி வறி

# மஹர சிறைச்சாலை மோதல்:

## இறுதி விசாரணை அறிக்கை நீதி அமைச்சரிடம் கையளிப்பு

மஹர சிறைச்சாலையில் ஏற்பட்ட மோதல் சம்பவம் தொடர்பில் ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிப்பதற்காக நியமிக்கப்பட்ட நிபுணர்கள் குழு, அதன் இறுதி அறிக்கையை நீதி அமைச்சர் ஜனாதிபதி சட்டத்தரணி அலி சப்ரியிடம் கையளித்துள்ளது.

குழுவின் தலைவரான முன்னாள் மேல் நீதிமன்ற நீதிபதி திருமதி குஸலா சரோஜினி வீரவர்தன தலைமையில் இறுதி அறிக்கை நேற்று கையளிக்கப்பட்டது.

நீதி அமைச்சர் அலி சப்ரியால் குறித்த நிபுணர்கள் குழு கடந்த மாதம் 29ஆம் திகதி நியமிக்கப்பட்டது.

குழுவின் இடைக்கால அறிக்கை கடந்த 7ஆம் திகதி கையளிக்கப்பட்டது. இதனைத் தொடர்ந்து ஒரு மாத காலத்துக்குள் முழுமையான அறிக்கையொன்றைச் சமர்ப்பிக்குமாறு இந்தக் குழுவுக்குப் பணிப்புரை வழங்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

தாகும் என்ற அடிப்படையில் அவருக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணையை நான் இந்த இடத்தில் கொண்டு வருகின்றேன் – என்றார்.

கூட்டமைப்பின் முன்னாள் 'மேயர் இ.ஆனோல்ட், மேயரே! இந்தக் கூட்டம் மிகக் கண்ணியமாக நடைபெற்று முடிவடைந்துள்ளது. மாநகர சபை மேயர் வெற்றிடத்துக்கு ஏற்பட்ட போட்டி நடைபெற்று தாங்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளீர்கள். அதற்காக எனது மனமார்ந்த வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன். இந்தச் சபையின் கண்ணியம் தவறாது செயற்பட வேண்டும். இது பிரதி மேயர் தெரிவுக்கான நேரமல்ல. பிரதி மேயர் தொடர்பில் உரிய தரப்பினருடன் ஆராய்ந்து சட்டமூலங்களின் பிரகாரம், அதனைப் புரிந்து மேற்கொண்டு செயற்பட நடவடிக்கை எடுப்பதே சாலப் பொருத்தம் என்பது எனது கருத்து. ஏனெனில் இது மேயர் தெரிவுக்கான கூட்டம். பிரதி மேயர் தொடர்பில் எந்தவொரு நம்பிக்கையில்லாப் பிரேரணையையும் இந்தச் சபை ஏற்றுக்கொள்ள முடியாது என்பதை எனக்குத் தெரிந்தளவில் வலியுறுத்த விரும்புகின்றேன். சபையைத் தவறாக வழிநடத்தாது நீங்கள் தெளிவாக ஆராய்ந்து முறைப்படி செய்ய முடிந்தால் அது சிறப்பாக இருக்கும் என்பது எனது கருத்து' – என்றார்.

மேயர் வி.மணிவண்ணன், பிரதி மேயர் தெரிவு தொடர்பில் பிறிதொரு கூட்டத்தில் தீர்மானிக்கப்படும். ஆதரவளித்த அனைவருக்கும் நன்றி – என்று கூறி அமர்வை ஒத்திவைத்தார்.

## கட்சித் தலைமையை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...

தலைவர் மாவை சேனாதிராஜா தெரிவித்தார்.

தன்னிச்சையான, ஜனநாயக விரோத, சட்டவிரோதமான மாவை சேனாதிராஜாவின் செயற்பாட்டினால்தான் யாழ். மாநகர சபையை இழந்தோம் என்று இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பிரதிப் பொதுச்செயலாளரும் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான எம்.ஏ.சுமந்திரன் குற்றஞ்சாட்டியுள்ளார். இது தொடர்பில் கடிதம் ஒன்றையும் மாவைக்கு நேற்று அவர் அனுப்பிவைத்துள்ளார்.

அந்தக் கடிதம் தொடர்பில் வினவிய போதே மாவை சேனாதிராஜா மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:–

எம்.ஏ.சுமந்திரனிடமிருந்து மின்னஞ்சலில் கடிதமொன்று வந்துள்ளது என எனக்குச் சொல்லப்பட்டுள்ளது. இன்னும் அதை நான் படிக்கவில்லை. ஊடகங்கள் தரப்பிலிருந்து விசாரித்ததில் சில உள்ளடக்கங்களை அறிந்துள்ளேன்.

கட்சியின் உள்ளக விடயங்கள், உள்ளுக்குள்ளேயே பேசப்பட வேண்டியவை. அந்த ஒழுக்கத்தை நான் பின்பற்றுகின்றேன். ஆனால், சுமந்திரன் கட்சி தலைமைக்கு எதிராக இரண்டாவது முறையாகப் பகிரங்கமாக அறிக்கை விடுத்துள்ளார். அது தவறானது. கட்சி நடவடிக்கைக் குரியது.

நாமும் பேசுவதெனில் பலதைப் பேசலாம். ஆனால், நாம் பொறுப்பான அரசியல்வாதிகள். அதனால் இன்று காலை கட்சிக்குள் இது பற்றி ஆலோசித்து, பதிலளிக்கத்தக்க விடயம் என்றால் உரிய முறையில் பதிலளிப்பேன் – என்றார்.

## மேயர் வேட்பாளர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...

பலத்த எதிர்பார்ப்புகளுக்கு மத்தியில் நேற்று நடைபெற்ற யாழ். மாநகர சபையின் புதிய மேயர் தெரிவில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தோல்வியடைந்துள்ளது. இது தொடர்பில் கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தனிடம் வினவியபோதே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:–

யாழ்ப்பாணம் மாநகர சபை மேயர் வேட்பாளர் தெரிவு தொடர்பில் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள் இருவரினதும் விருப்பத்துக்கு அமைவாக – மிகவும் பக்குவமாகவும் பொறுப்பாகச் செயற்படுமாறு – கட்சியின் தலைவரின் (மாவை சேனாதிராசா) கவனத்துக்குக் கொண்டு வந்திருந்தேன். அதன் பின்னர் என்ன நடந்தது என்பது தொடர்பில் எனக்குத் தெரியாது.

புதிய மேயருக்கான வேட்பாளர் பரிந்துரை தொடர்பில் இறுதியாக எடுக்கப்பட்ட தீர்மானம் குறித்து எனக்கு அறிவிக்கப்பட வில்லை. அதனால் இந்த விடயம் தொடர்பில் நான் அலட்டிக்கொள்ள விரும்பவில்லை.

யாழ்.மாநகர சபையை இலங்கைத் தமிழரசுக் கட்சி தலைமையிலான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இழந்தமைக்கு நான் பொறுப்பு அல்லன் – என்றார்.

## சொலமன் சிறிலை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...

தெரிவித்ததாவது:–

யாழ்.மாநகர சபையில் நேற்று நடைபெற்ற புதிய மேயர் வேட்பாளர் தெரிவில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வேட்பாளர் இம்மானுவேல் ஆனோல்ட்டுக்குக் கூட்டமைப்பின் 16 உறுப்பினர்களில் 15 பேர் ஆதரவாக வாக்களித்திருந்தனர். ஆனோல்ட்டை அவர்கள் விரும்பியமைக்கு இதுவே சாட்சி. கூட்டமைப்பின் ஓர் உறுப்பினர் மட்டும் நடுநிலை வகித்திருந்தார். அவரின் இந்த நடுநிலையும் தோல்விக்கு ஒரு காரணமாக இருக்கின்றது. அவர் சுமந்திரன் ஆதரவாளர் என்பது குறிப்பிடத்தக்கது. அவரின் இந்தச் செயற்பாடு எமக்கு அதிருப்தியளிக்கின்றது. அவருக்கு எதிரான நடவடிக்கை தொடர்பில் இன்று நடைபெறும் கட்சிக் கூட்டத்தில் தீர்மானம் எடுப்போம்.

சுமந்திரனின் ஆதரவாளர்கள் மூவர் இருந்தார்கள். இருவர் ஆனோல்ட்டை ஆதரித்தார்கள் – என்றார்.

## யாழில் நேற்றும் 12...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...

வைத்திய கலாநிதி த.சத்தியமூர்த்தி தெரிவித்தார்.

யாழ்.போதனா வைத்திய சாலை மற்றும் யாழ்.மருத் துவபீட ஆய்வு கூடங்களில் 676 பேருக்கு நேற்று பி.சி.ஆர். பரிசோதனை செய்யப்பட்டது.

இதில் யாழ்.மாவட்டத்தைச் சேர்ந்த 12 பேருக்கும், புதுக்குடியிருப்பைச் சேர்ந்த ஒருவருக்கும், தனிமைப்படுத்தல் நிலையத்தைச் சேர்ந்த ஒருவருக்கும் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

அதற்கமைய உடுவிலில் 8 பேருக்கும் (ஒருவரைத் தவிர 7 பேரும் தொற்றாளர்களுடன் தொடர்புகொண்டிருந்தமையால் சுயதனிமைப்படுத்தலில் இருந்தவர்கள்), சண்டிலிப்பாயில் 3 பேருக்கும் (தொற்றாளர்களுடன் தொடர்புகொண்டிருந்தமையால் சுயதனிமைப்படுத்தலில் இருந்தவர்கள்), தெல்லிப்பழையில் ஒருவருக்கும் (தொற்றாளருடன் தொடர்புகொண்டிருந்தமையால் சுயதனிமைப் படுத்தலில் இருந்தவர்), புதுக்குடியிருப்பில் ஒருவருக்கும் (ஏற்கனவே தொற்று கண்டுபிடிக்கப்பட்டவரின் குடும்ப உறுப்பினர்), தம்பகொலபட்டின தனிமைப்படுத்தல் நிலையத்தில் ஒருவருக்கும் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

காலைக்கதிர் Kalaikkathir

# இலங்கையில் மிகவும் வயது முதிர்ந்த 'வேலு பாப்பானி அம்மா' காலமானார்!



இலங்கையில் மிகவும் வயது முதிர்ந்த பெண், நாகொட பொது வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட நிலையில் உயிரிழந்துள்ளார்.

117 வயதுடைய வேலு பாப்பானி அம்மா என்ற மூதாட்டியே நேற்றிரவு மரணமடைந்துள்ளார்.

இரு பிள்ளைகளின் தாயாரான இவர், 1903 ஆம் ஆண்டு மே 03 ஆம் திகதி, களுத்துறை மாவட்டம், தொடங்கொடை பிரதேச செயலக பிரிவில் உள்ள நேஹின்ன கிராமத்தில் பிறந்தார்.

அவரது விபரங்கள் அரசால் வழங் கப்பட்ட முதியவரின் அடையாள அட்டை மூலமாகவும் சரிபார்க்கப்பட்டுள்ளன.

இதேநேரம், உலக முதியோர் தினத்தைக் குறிக்கும் வகையில் இந்த ஆண்டு ஒக்டோபர் முதாலம் திகதி இலங்கையின் மிகவும் வயதான பெண் எனத் தெரிவிக்கும் சான்றிதழை முதியயோருக்கான தேசிய சபை குறித்த பெண்மணிக்கு வழங்கியிருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

## கொரோனா சடலங்கள் எரிப்பு:

# விசேட நிபுணர்களின் அறிக்கை சுகாதார அமைச்சரிடம் சமர்ப்பிப்பு!

கொரோனா வைரஸ் தொற்று காரணமாக உயிரிழக்கும் நபர்களை அடக்கம் செய்ய அனுமதிப்பதா அல்லது தற்போதும் தொடரப்படும் தகனம் மட்டும் எனும் நிலைமையைத் தொடர்வதா என்பது தொடர்பாக ஆராய நியமிக்கப்பட்ட நிபுணர்கள் குழுவொன்றின் அறிக்கை சுகாதார அமைச்சிடம் கையளிக்கப்பட்டுள்ளது.

குறித்த 9 பேர் அடங்கிய நிபுணர்கள் குழுவின் தலைவர் பேராசிரியர் ஜெனிபர் பெரேராவால் இந்த அறிக்கை கடந்த திங்கட்கிழமை மாலை சுகாதார அமைச்சிடம் கையளிக்கப்பட்டுள்ளது.

எவ்வாறாயினும் குறித்த அமைச்சிடம் கையளிக்கப்பட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ள விடயம் என்ன என்பதை நேற்று முன்தினம் மாலை வரை உறுதியாக அறிய முடியவில்லை. எவ்வாறாயினும் இந்த 9 பேர் கொண்ட குழுவின் அறிக்கை ஏகமனதான தீர்மானத்தின் அடிப்படையில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாக அறியமுடிகின்றது.

இந்த அறிக்கையின் தீர்மானம் இன்று பெரும்பாலும் வெளிப்படுத்தப்படும் என தெரிகிறது.

முன்னதாக சுகாதார அமைச்சின் நிபுணர்கள் குழு, கொவிட் தொற்றால் ஏற்படும் மரணங்களின் போது, சடலங்களை தகனம் மட்டும் செய்ய வேண்டும் என பரிந்துரை செய்திருந்தது.

அது தொடர்பில் எழுந்த பல்வேறு மாறுபட்ட கருத்துக்கள், எதிர்ப்புகளை அடுத்து, அடக்கம் செய்யவும் அனுமதியளிப்பதா என்பதை ஆராய இந்த 9 பேர் கொண்ட நிபுணர்கள் குழு நியமிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# மஹர சிறை மோதல்: 4 கைதிகளின் சடலங்களை

## தகனம் செய்யுமாறு உத்தரவு!

கொழும்பு, டிசெ.31

மஹர சிறைச்சாலை சம்பவத்தில் உயிரிழந்த மேலும் 4 கைதிகளின் சடலங்களை தகனம் செய்யுமாறு வத்தளை நீதிவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

இந்த வழக்கு வத்தளை நீதிவான் நீதிமன்றத்தின் நீதிவான் ஸ்ரீ புத்திக்க ஸ்ரீ ராகல முன்னிலையில் நேற்று புதன்கிழமை விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

இந்த நால்வரில் மூவருக்கு கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. இந்த நிலையிலேயே இந்த நால்வரின் சடலங்களையும் தகனம் செய்யுமாறு உத்தரவிடப்பட்டுள்ளது.

அத்துடன் சம்பவத்தில் உயிரிழந்த ஏனையவர்களின் சடலங்களுக்கு பிரேத பரிசோனைகள் இடம் பெற்று வருகின்றன.

மஹர சிறைச்சாலையின் கைதிகள் சிலருக்கு கொரோனாத் தொற்று ஏற்பட்டதை தொடர்ந்து மேலும் சில கைதிகள் சிறைச்சாலையில் இருந்து தப்பிச்செல்ல முயற்சித்த சம்பவத்தை காரணமாகக் கொண்டு அங்கு சில வாரங்களுக்கு முன்னர் அமைதியின்மை ஏற்பட்டது.

அதன்படி, சிறைச்சாலையில் வைக்கப்பட்டுள்ள ஆயுள் தண்டனை கைதிகளை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள கைதிகள் தாக்கியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இந்த மோதலில் 11 பேர் உயிரிழந்தனர் என்பதுடன், 104 பேர் காயமடைந்திருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# 40 லட்சம் மக்களுக்கு தடுப்பூசி உடன் தேவை

## சுதர்ஷினி பெர்னாண்டோபுள்ளே தெரிவிப்பு



கொரோனாத் தடுப்பூசி முதன்முதலில், சுமார் 4 மில்லியன் மக்களுக்கு வழங்க வேண்டிய தேவையுள்ளதாக இராஜாங்க அமைச்சர், விசேட வைத்திய நிபுணர் சுதர்ஷினி பெர்னாண்டோ புள்ளே தெரிவித்துள்ளார்.

தற்போது தயாரிக்கப்படுகின்ற தடுப்பூசிகளில் ஒன்றை உலக சுகாதார ஸ்தாபனத்தினூடாக பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

இந்த நிலையில், இலங்கையில் கொரோனா வைரஸைக் கட்டுப்படுத்தும் தடுப்பூசியை எதிர்வரும் மார்ச் மாதம் முதல் வழங்குவதற்கு எதிர்பார்த்துள்ளார் எனவும் இராஜாங்க அமைச்சர் கூறியுள்ளார்.

16 வயதுக்கு உட்பட்ட சிறுவர்களுக்கும் கர்ப்பிணி பெண்களுக்கும் தடுப்பூசி வழங்கப்பட மாட்டாது எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

மக்களுக்கு தேவையான அளவில் கொரோனா தடுப்பூசியை வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் வைத்திய நிபுணர் சுதர்ஷினி பெர்னாண்டோபுள்ளே தெரிவித்துள்ளார்.





# கல்யாணமாலை



வட சர்வதேச திருமண சேவை

**மணமகன் விவரம்**

பிறந்த திகதி - 1982.06.16
மதம் - இந்து V
நட்சத்திரம் - ரேவதி
செவ் - 07இல்
பாவம் - 25 1/2
கல்வி - A/L
தொழில் - TV கடை
எதிர்பார்ப்பு -சாதாரண பெண்

**மணமகள் விவரம்**

பிறந்த திகதி - 1996.01.19
மதம் - இந்து V
நட்சத்திரம் - பூராடம்
பாவம் - 19 1/4
செவ் - 5இல்
கல்வி - Q.S பட்டதாரி
தொழில் - Q.S
எதிர்பார்ப்பு - சூரி/ செவ் 3,5, 6,9, 10, 11இல் சர்பதோஷம் Q.Sதேவை

Kalyanamalai Vada.com தினசரி முகநூலிலும், யாழ் காலைக்கதிர் பத்திரிகையில் காலையிலும் மாலையிலும் வெளிவரும் மணமக்களை நீங்களே தெரிவு செய்து எம்முடன் தொடர்புகொள்ள நாம் திருமணத்தை நிறைவேற்றித் தருவோம். மணமக்கள் விண்ணப்பப் படிவத்தினை புத்தகக் கடைகளிலும், பத்திரிகை விற்பனை நிலையங்களிலும் வாங்கி விண்ணப்பியுங்கள், முக நூலிலும் விண்ணப்பம் உண்டு. அலுவலக நேரம் காலை 9 தொடக்கம் 5 வரை. சனி, ஞாயிறு மற்றும் போயா தினங்களில் பதிவுகளை மேற்கொள்ள முடியும். பதிவுக் கட்டணம் 1000 + 300.

க.இல - 8000661351 வர்த்தக வங்கி, பருத்தித்துறை.

உப அலுவலகம்,
சந்தை வீதி,
இமையாணன் மேற்கு,
உடுப்பிட்டி.

077 3434 415
077 8578 528


இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 31.12.2020 இல் வெளியிடப்பெற்றது.